வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி


ஜனவரி 13 - 19, 2016

பக்கம் 24

விலை 30/-




# தமிழ் மக்களின் மனதில் இடம்பிடிப்பாரா மைத்திரி?



## தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் கே.கே.ஆர்



வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

1717 FOLLOW US www.mobitel.lk

SLT மொபிடெல் வழங்கும்
சிறந்த
IDD கட்டணங்கள்

| நாடுகள் | மொபைல் | நிலையான |
|---|---|---|
| ஐக்கிய இராஜ்ஜியம் | ரூ.10/- | ரூ.1.80/- |
| ஜேர்மனி | ரூ.10/- | ரூ.2.40/- |
| இத்தாலி | ரூ.10/- | ரூ.2.90/- |
| பிரான்ஸ் | ரூ.10/- | ரூ.2.90/- |
| ஐக்கிய அரபு இராஜ்ஜியம் | ரூ.10/- | ரூ.10/- |
| குவைட் | ரூ.10/- | ரூ.10/- |

குறித்த கட்டணங்கள் IDD Buddy அழைப்புகளுக்கானவை.
விசேட அழைப்பு முறை கொண்டது
அழையுங்கள் 100 <தேசக் குறியீடு> <அழைப்பைப் பெறுபவர் இல.>

Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே, என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையடக்க துவைக்கும் இயந்திரம்

உடுப்புத் துவைக்கும் இயந்திரத்துக்கு இனி வேலை இருக்கப் போவதில்லை. உடுப்புத் துவைக்கும் வேலையை இனி 'டொல்ஃபி' என்ற சிறிய கருவியே செய்து விடப் போகிறது. ஒரு சோப் அளவுக்கு கையடக்கமாக இருக்கும் 'டொல்ஃபி', அல்ட்ரா சோனிக் தொழில்நுட்பத்தில் வேலை செய்கிறது. ஒரு வாளியில் தண்ணீர் விட்டு, சோப்புத் தூளைச் சேர்த்து, அழுக்குத் துணிகளை போட்டு விட வேண்டும். 'டொல்ஃபி'யை இயங்கவைத்து செய்து வாளியில் வைத்து விட வேண்டும். 'டொல்ஃபி'யில் இருந்து சக்தி வாய்ந்த 'அல்ட்ராசோனி'க் அலைகள் உருவாகி, குமிழ்களை ஏற்படுத்தும். துணிகளில் உள்ள அழுக்குகள் மாயமாகும். அரை மணி நேரத்தில் துணிகளைத் துவைத்துக் கொடுத்துவிடும். கையடக்கமான இந்த 'டொல்ஃபி'யை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

உடுப்புத் துவைக்கும் இயந்திரத்தைவிட துணிகளை மிக மென்மையாகக் கையாளும் 'டொல்ஃபி'. பருத்தி, பட்டு, 'பொலியெஸ்டர்' என்று எந்த வகையான துணிகளையும் சுத்தம் செய்து கொடுத்துவிடும். உடுப்புத்துவைக்கும் இயந்திரத்தைவிட 80 சதவிகிதம் குறைவான ஆற்றலில் 'டொல்ஃபி' இயங்குவதால், சத்தமே வெளியே வராது. ஜெர்மனைச் சேர்ந்த தொழிலதிபர் லெனா சோலிஸ் இதை உருவாக்கியிருக்கிறார். வெளியிடங்களுக்குச் செல்லும்போது துணிகளைத் துவைப்பது கடினமான விஷயமாக இருந்தது.

இதற்கு ஏதாவது ஒரு தீர்வு கண்டுபிடிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அல்ட்ராசவுண்ட் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்தேன். அல்ட்ராசோனிக் அலைகளை வைத்து துணி துவைக்கும் முயற்சியை உருவாக்கிவிட்டேன். 'டொல்ஃபி'யை எடுத்துச் சென்றால் சலவைக்குச் செலவு செய்யும் பணம், நேரம் மிச்சமாகும். துணி துவைப்பதே சந்தோஷமான விஷயமாக மாறிவிடும். கடந்த ஜனவரியில் திட்டத்தை ஆரம்பித்தோம். விரைவில் விற்பனை செய்ய இருக்கிறோம். ஒரு 'டொல்ஃபி' சுமார் 21 ஆயிரம் ரூபாய் என்கிறார் லெனா சோலிஸ்.

உலகெங்கிலும் சுமார் 2.3 பில்லியன் மக்கள் முறையான சுகாதாரம் அற்ற கழிப்பறைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களை மையமாகக் கொண்டு பிரித்தானியாவில் நவீன ரக கழிப்பறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக் கழிப்பறைக்கு நீர் அவசியமற்றதாக இருப்பதுடன், கழிவுகளை சக்தி பிறப்பிக்கப்படும் மூலமாகவும் பயன்படுத்தக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

Nano Membrane Toilet எனப்படும் இந்த கழிப்பறை விலை குறைவானதாகவும், சூழலுக்கு இயைபாக்கம் உடையதாகவும் உருவாக்கப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும்.இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் நனொ தொழில்நுட்பத்தினைக் கொண்ட படையானது நீரையையும், திண்மக் கழிவினையும் வேறுபடுத்த உதவுகின்றது.



# மனிதக் கழிவினை சக்தியாக மாற்றும் நவீன கழிப்பறை



# பென்சில் முனையில் சிற்பங்கள்

ரஷ்யாவைச் சேர்ந்த 'சலவட் ஃபிடாய் மினியேச்சர்' என்பவர் சிற்பங்களை உருவாக்குவதில் உலகிலேயே மிகச் சிறந்த கலைஞர். அவரது கலைகளில் மிகவும் முக்கியமானது பென்சில் முனையில் வடிக்கும் சிற்பங்கள். உருப்பெருக்கிக் கண்ணாடியையும் கத்தியையும் வைத்துக்கொண்டு மிகப் பிரபலமான உருவங்களை எல்லாம் செதுக்கி விடுகிறார். என் பெற்றோர் கலைஞர்கள். நான் வக்கீலாக வேலை பார்த்து வந்தேன். ஆனாலும் கலைகள் மீதுதான் என் ஆர்வம் முழுவதும் இருந்து வந்தது. ஒருகட்டத்தில் வேலையை விட்டுவிட்டு, முழு நேரக் சிற்பக் கலைஞராக மாறிவிட்டேன். 'பென்சில் கிராபைட்டில்' உருவங்களைச் செதுக்குவதுதான் மிகவும் சவாலான பணியாக இருக்கும். ஆரம்பத்தில் ஏராளமான தோல்விகள். எவ்வளவு பென்சில்கள் உடைந்தன என்பதற்கு கணக்கே இல்லை. இப்பொழுதும் கூட ஒவ்வொரு உருவமும் செதுக்குவதற்குள் 7 பென்சில்களாவது உடைந்துவிடுகின்றன. நிறைய நேரமும் அளவற்ற பொறுமையும் தேவைப்படும். 'வான் காவின் இரவு' ஓவியத்தை பூசணி விதையில் தீட்டியிருக்கிறேன். அதைப் பார்ப்பதற்கே 'லென்ஸ்' வேண்டும் என்கிறார் ஃபிடாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மக்களின் மனதில் இடம்பிடிப்பாரா மைத்திரி?

- ஊர்மிலா

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை அகற்றிட வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினார்கள். அவர்களின் விருப்பம் நிறைவேறுவதற்கு அரசியல் தலைவர்கள் பலர் முட்டுக்கட்டையாக இருந்தனர். மசூதிகள் தக்கப்பட்டதாலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்செயல்களால் அவர்களும் ஆட்சியை மற்ற வேண்டும் எனத் துடித்தனர்.

ஆனால், முஸ்லிம் தலைவர்கள் தமது இருப்புக்காகப் புதிய அரசியல் சட்டங்கள் எல்லாவற்றுக்கும் தலையாட்டினர். விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதால் சிங்கள மக்களின் நம்பிக்கை அதிகரித்தது. மகிந்தவை ஆட்சியில் இருந்து அகற்ற முடியாது என்ற அதீத நம்பிக்கை உருவானது. சந்திரிகா, ரணில், மைத்திரி கூட்டு அந்த நம்பிக்கையை உடைத்தெறிந்தது. நல்லாட்சி என்ற கோஷத்துடன் புதிய அரசு அமைந்து ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது அந்த ஒருவருடத்தில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியதா என்ற கேள்விக்கு உடனடியாகப் பதில் கூற முடியாது.

மேலெழுந்த வாரியாக ஒருசில சொற்ப நன்மைகள் கிடைத்தனவே தவிர, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவில்லை. வடக்கு மாகாண சபையை திறம்பட நடத்துவதற்கு அன்றைய ஆளுநர் முட்டுக்கட்டை போடுகிறார் என்ற குற்றச்சாட்டு இருந்தது. ஆளுனரை மாற்றுவதற்காகவே வடக்கு மக்கள் தேர்தலில் வாக்களித்தனர். ஆளுனரை மாற்றி நல்லாட்சி ஆரம்பமானது. வடமக்கான ஆளுனர் சந்திரசிறி மாற்றப்பட்டு எச்.எம். ஜி.எஸ். பள்ளிக்கார நியமிக்கப்பட்டார். முதலமைச்சருக்கு முட்டுக்கட்டை போட்ட பிரதம செயலர் மாற்றப்பட்டு புதியவர் நியமிக்கப்பட்டார். முதலமைச்சருக்கு எதிராக உள்ளிருந்தே புதிய தலைவலிகள் ஆரம்பமாகின.

தமிழ் அரசியல் கைதிகள்விடுதலை செய்யப்படுவர்கள் என்ற எதிர்பார்ப்புக்கு புதிய தடைகள் உருவாகின. சந்திரிகா கொலை முயற்சியில் குற்றம் சாட்டப்பட்ட பெண் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார். இருபது வருடங்களாக குற்றவாளி என்ற சந்தேகத்தில் அவர் அனுபவித்த கொடுமைகளில் இருந்து அவர் விடுதலை செய்யப்படவில்லை. இவரைப்போன்று சிலர் விடுதலை செய்யப்பட்டனர். ஒப்புதல் வாக்கு மூலம் ஏற்றுக்கொள்ளப்படமையினால் விடுதலையானவர்களின் எதிர்காலம் இப்போதும் இருண்டதாகவே உள்ளது. தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காகச் சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. வடக்கு, கிழக்கு முடங்கும் வகையில் ஹர்த்தால் நடத்தப்பட்டது. ஜனாதிபதி மைத்திரி தலையிட்டு வக்களித்ததனால் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணா விரதத்தைக் கைவிட்டனர். 30 அரசியல் கைதிகள் கடும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர். ஏனையோர் தமது விடுதலைக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

வடக்கு மீனவர்களின் வழ்வாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள தமிழக மீனவரின் அத்து மீறல், தொடர் கதையாக உள்ளது. தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்கிறது. அதற்கு எதிராக தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்துகின்றனர். பல சுற்றுப்பேச்சு வார்த்தைகள் முடிவின்றித் தொடர்கின்றன.



ஜனாதிபதி வாக்குறுதியளித்தது போல அதி உயர் பாதுகப்பு வலயங்கள் படிப்படியாக விடுவிக்கப்படுகின்றன. அடுத்த தலைமுறை தாம் பிறந்ததாகப் பெற்றோர் கூறிய இடங்களை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவை எல்லாம் புதர் மண்டிய பூமியாக உள்ளன. வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்கள்,பாடசாலைகள் எல்லாம் அழிவடைந்து காணப்படுகின்றன. மன்னர் காலத்து கல் வெட்டுகள் போன்று தம் கால நினைவுகளை முதியவர்கள் மீட்டுப் பார்க்கின்றனர். சம்பூர், வலிகாமம் ஆகிய பகுதிகளின் மக்களின் எதிர் பார்ப்பு நிறைவேறி உள்ளது.

வடக்கு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை பூதாகரமாக எழுந்து நிற்கிறது. குடிநீரில் கழிவு ஒயில் உள்ளது என்று ஒருபுறமும் ஆபத்தான மாசு சுன்னாகம் பகுதியில் இல்லை என்றும் மறுபுறமும் அறிக்கைகள் மக்களை பேதலிக்க வைக்கின்றன. தமது ஆய்வுதான் சரி என இரண்டு பகுதியும் கூறுவதால் மக்கள் குழம்பிப்போய் உள்ளனர்.

ஓமந்தை சோதனைச்சாவடி அகற்றப்பட்டது வடக்கு மக்களுக்கு நிம்மதியாக உள்ளது. போதை வஸ்த்தும் மதுப்பாவனையும் அதிகரித்தது சமூக ஆர்வலர்களை அதிர்ச்சியளிக்க வைத்துள்ளது. விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. புத்தம் புதிய வீதிகள் போக்கு வரத்துக்கு இலகுவாக இருக்கும் அதேவேளை, அதிவேகம் அனாவசிய விபத்துக்களை உண்டாக்குகின்றன.

நல்லாட்சியின் ஆரம்பம் முன்னாள் அரசியல்வாதிகளை கலங்க வைத்தது. முன்னாள் அமைச்சர்களான திஸ்ஸ அத்தநாயக்க, பசில் ரஜபக்ஷ, ஜனக்க பண்டார தெனக்கோன், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டபோது அரசியல் பழிவங்கல் என்றார்கள். முன்னாள் ஜனாதிபதி, மற்றும் கோத்தபாய ஆகியோரை விசாரணை செய்தபோது , அதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

லசந்த ,ரவிராஜ் ஆகியோரின்.கொலை விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பத்திரிகையாளர் பிரகீத் காணாமற்போன சம்பவத்தின் கொலையாளிகளை நெருங்கி விட்டதாக கூறப்படுகிறது. ஆயுதக்கப்பல் விவகாரத்தில் முக்கிய பிரமுகர் கைது செய்யப்படுவர் என்ற எதிர்பார்ப்பு இந்த ஆண்டும் தொடரப் போகிறது.

புதியதொரு நாட்டை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரி விரும்புகிறார். நல்லாட்சிக்கு எதிரானவர்கள் அதற்கு முட்டுக்கட்டை போடுகின்றனர். அமைச்சர் பதவியை எதிர்பார்த்து பலர் காத்திருக்கின்றனர். அவர்களை திருப்திப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலையில் ஜனாதிபதி உள்ளார்.

நல்லாட்சியில் ஒரு இருண்ட உலகம் இருப்பதாக உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்ட அமைப்பின் அறிக்கை' கூறுகிறது. அந்த இருண்ட உலகத்தில் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடருவதாக அந்த அறிக்கை குற்றம் சாட்டுகிறது. கடத்தல், துன்புறுத்தல்,பாலியல் பலாத்காரம்,சித்திரவதை என்பன தொடர்வதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. உலக நட்டு நெருக்கடியில் இருந்து இலங்கை தப்பி விட்டது. நல்லாட்சியின் நன்மை இலங்கைக்கு கிடைத்துள்ளது. ஜெனிவாவில் எதிர் நோக்கிய நெருக்கடி குறைந்துள்ளது. சீனாவின் பிடியில் இருந்த இலங்கையை மீட்டு விட்டதாக அமெரிக்காவும் இந்தியாவும் கருதுகின்றன. இலங்கயை விட்டு வெளியேற சீனா விரும்பவில்லை. நல்லாட்சியின் மனதில் இடம் பிடிக்க காய் நகர்த்துகிறது.

இவற்றின் விளைவுகள் எவையாக இருக்குமோ என்ற சஞ்சலம்,தமிழ் மக்களின் மனங்களை சிதலமாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

பாட்லா வந்ததும் அவனது நடவடிக்கைகளை பார்த்து எரிச்சலான தாவூத்தின் ஆட்கள் அவனை பாட்டிலால் தாக்கினார்கள். நிலை குலைந்து போன பாட்லா அப்படியே சரிந்து விழுந்தான். அதோடு விடாமல் அவன் கழுத்தில் கத்தியை வைத்து முகத்தில் கத்தியால் கோடு போட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவனை கத்தியால் கிழித்துக்கொண்டு இருந்தனர். இருந்தாலும் பாட்லா அசரவில்லை.

இறுதியாக அவனது வலது கையில் உள்ள விரல்கள் ஒவ்வொன்றையும் கத்தியால் நறுக்கினார்கள். இந்த காட்சியைக் கண்டு சாராயக்கடையில் குடிக்க வந்தவர்கள் சிதறி ஓடினர். ஒரு சிலர் மட்டும் ஓடி ஒளிந்து கொண்டு நடந்தவற்றை பார்த்துக்கொண்டு இருந்தனர். வந்திருப்பது தாவூத் இப்ராஹீம் என்பதை தெரியாத சிலர் பாரில் கலாட்டா என்று காவல்துறைக்கு போன் செய்தார்கள்.

பொலிஸ் வந்து சேர்வதற்குள் பாட்லாவின் கையில் உள்ள அனைத்து விர்ல்களும் துண்டாக நறுக்கப்பட்டு தரையில் சிதறிக்கிடந்தன. ரத்த வெள்ளத்தில் துடிதுடித்தபடி நடுத்தெருவில் கிடந்தான் பாட்லா. என்ன காரணத்திற்காக பாட்லர்வை கொலை செய்யாமல் விட்டனர் என்று காவல் துறைக்கு புரியவில்லை. பொலிஸ் விசாரணையில் 'மோட்டிவ்' கொலைக்கான காரணத்தை சொல்லி பாட்லாவை சிறையில் அடைத்தனர்.

### மும்பை கடத்தலின் பிதாமகன் வீழ்ந்த கதை

மும்பையில் அடிக்கடி இந்த மாதிரி சம்பவங்கள் நடப்பது சர்வ சாதாரணமாக இருந்தது. போதைப்பொருள் கடத்தல், ஆள்கடத்தல், தங்கம் கடத்தல் உள்பட பல்வேறு சம்பவங்களால் குற்றங்கள் அதிகமாகி கொண்டு இருந்து. இதற்காக பல்வேறு தனிப்படை போட்டு வேலை செய்தது பொலிஸ். ஆனாலும் கடத்தல், கொலை உள்பட பல்வேறு சம்பவங்கள் நடந்து கொண்டே இருந்தன. மும்பையின் தாதா கலாசாரத்தை, கடத்தல் தொழிலை யார் கொண்டு வந்தது என்று ரா' அமைப்பு களத்தில் இறங்கி விசாரிக்க ஆரம்பித்து. அதில் மூத்த முன்னோடியாக கரீம் லாலா என்பவர் வந்தார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து பிழைக்க வந்த குடும்பம் கரீம் லாலாவின் குடும்பம். ஆப்கானிஸ் தானில் இருந்து சில ஆயிரக்கணக்கான மக்கள் மொத்தமாக அவர்கள் நாட்டை விட்டு மும்பைக்கு வந்தனர். வந்தவர்கள் மும்பையில் மார்கெட், துறைமுகம், உள்பட பல்வேறு இடங்களில் கூலி வேலைகளை செய்துவந்தனர்.

அவர்களைப்போலதான் கரீம் லாலாவின் குடும்பமும் வந்தது. பள்ளிப்படிப்பை தாண்டாத கரீம் லாலா தனது பதினெட்டு வயதில் கள்ளசாராயம் கடத்த ஆரம்பித்தார். அதன்பிறகு தடை செய்யப்பட்ட பல்வேறு பொருட்களை கடத்தி வந்ததால் செல்வாக்கு உயர்ந்தது. கரீம் லாலாவிடம் மிகவும் சொற்பமான தொகைக்கு வேலை செய்ய நிறைய ஆப்கானிஸ்தான் நபர்கள் வேலைக்கு வந்தனர். இருந்தாலும் மும்பையில் நடந்து வரும் நடைமுறை உள்ளூர் அரசியலை சமாளித்து வேலை பார்க்க உள்ளூர் ஆட்கள் தேவைப்பட்டனர். அதன்பிறகு பல்வேறு நபர்கள் கரீம் லாலாவிற்கு வேலை செய்ய ஆரம்பித்தனர்.

இது போன்ற ஒரு தருணத்தில் சைக்கிள் கடையில் பஞ்சர் ஒட்டிக் கொண்டு இருந்த இளைஞன் ஹாஜி மஸ்தான் என்பவரை கரீம் லாலாவிற்கு அறிமுகம் செய்து வைத்தனர்.



பின்னாளில் அவர்தான் பாலிவுட்டின் மிகப்பெரிய சினிமா தயாரிப்பாளராக வலம் வந்தார். தமிழ்நாட்டை சேர்ந்த ஹாஜி மஸ்தான் சில ஆண்டுகள் கழித்து கரீம் லாலாவிடம் இருந்து பிரிந்து வந்து கடத்தல் தொழில் செய்ய ஆரம்பித்தார்.

இருபது வயதில் தொடங்கிய ஹாஜி மஸ்தானின் கடத்தல் பயணம் மும்பையில் யார் ஆட்சியை பிடிப்பது, யார் பாலிவுட்டில் சினிமா ஸ்டாராக நீடிப்பது, கடத்தல் உள்பட பல்வேறு தொழில்களில் அவர்களுக்கு என்று தனியாக தொழில் ஏரியாக்கள் பிரித்து கொடுப்பது உள்பட பல்வேறு டான் வேலைகளை செய்து வந்தார்.

அரசியல்பலமும், சினிமாவும் பலமும் ஒன்றாக் இருந்ததால் மும்பையின் அசுர சக்தியாக வளம் வந்தார் ஹாஜி மஸ்தான். எப்பொழுதும் வாயில் வெளிநாட்டு சிகரெட், கோட், சூட், தலையில் ஸ்டைலான குல்லா, வெள்ளை நிற பென்ஸ் கார் என்று ஒரு 'டானு'க்குரிய கனக் கச்சிதமான தோற்றத்தில் வலம் வருவார் ஹாஜி மஸ்தான். கரீம் லாவிற்கும் ஹாஜி மஸ்தானுக்கும் இடையில் தொழில் போட்டி இருந்து வந்தது. யார் அதிகாரம் செலுத்துவது என்கிற அதிகார போட்டியில் இவர்கள் அணிகளும் பார்க்கும் இடங்களெல்லாம் துப்பாக்கியை எடுத்து சுட்டுக்கொள்வார்கள்.

இதனால் பொது மக்களுக்கு பெரும் அளவில் பாதிப்பு இருந்தது. இவர்கள் போடும் சண்டையில் பல அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள். அதோடு இல்லாமல் மார்கெட், துறைமுகம், நடுவீதி என்று எல்லா இடங்களிலும் சண்டை துப்பாக்கி, கொடூர ஆயுதம் உள்பட பல்வேறு பொருட்களால் தாக்கி கொள்வதால் ஆட்களோடு நிறைய பொருட்களும் சேதாரம் ஆனது.

இருவரையும் அடக்க போலீஸ் பல்வேறு யுக்திகளை கையாண்டது. இருவருக்கும் பொதுவான ஆட்களை வைத்து சமாதான பேச்சு வார்த்தையை நடத்தியது. பலனில்லை அடுத்த இரண்டு நாட்களில் கரீம் லாலாவின் ஆள் ஒருவனை ஹாஜி மஸ்தானின் ஆட்கள் தலையை வெட்டி எடுத்து வந்து கரீம் லாலாவின் வீட்டு வாசலில் போட்டுவிட்டு உடலை மாஹி கடல் பகுதியில் தூக்கி போட்டு விட்டு சென்றனர். இருவருக்குமான ஹேங் வார் அப்போது உச்சகட்டத்தில் இருந்தது.

மும்பையில் யார் புதிய தொழில் தொடங்குவதாக இருந்தாலும் ஹாஜி மஸ்தான், கரீம் லாலாவின் அனுமதி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்கிற நிலைமை வந்தது. இதனால் இந்திய அரசு பயங்கரமான நெருக்கடியை சந்தித்தது. என்ன செய்யலாம் என்று யோசித்த அரசு ஒரு முடிவு எடுத்தது. அந்த முடிவுதான் இருவருக்கும் 'தி டான்' என்கிற பெயரும், அவர்களின் தொழில் உள்பட எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாக சரிய காரணமாக இருந்தது.

***

த ன்னை எப்போதும் மற்றவர்களை விட அதிக புத்திசாலியாகவும் , திறமையானவனாகவும் காட்டிக்கொள்வதில் விருப்பம் கொண்டவன் தாவூத் . அதை பல்வேறு சம்பவங்களில் உணர்த்தியும் இருக்கிறான். பல சமயங்களில் அவனது நடவடிக்கைகள் எல்லாம் கை தேர்ந்த அரசியல்வாதிபோல இருக்கும் அவனது செயல்கள். யாராலும் செய்ய முடியாது என்று தவிர்க்கப்பட்ட 'விஷயத்தை' கொஞ்சம் கூட உயிர் பயமின்றி சவாலாக செய்து முடிப்பது தாவூத்துக்கு பிடிக்கும். சிங்கப்பூர் தேசம் வளர்ந்து வந்த நேரம். எல்லோரின் பார்வையும் சிங்கப்பூர் பக்கம் இருந்து வந்தது. அந்த நாட்டில் சுற்றுலா உள்பட நாட்டின் பல்வேறு தொழில்கள் மூலம் அந்த நாட்டின் வருமானம் கொட்டியது. இந்தியாவில் இருந்து பெரும்பாலான பணக்கார தொழில் அதிபர்கள் ஓய்வுக்காக சிங்கப்பூர் சென்று வந்தனர். மும்பையை பிரபல வைர வியாபாரி ஒருவர் சிங்கப்பூர் ஒன்றுக்கு சுற்றுலா செல்வதாக சொல்லிவிட்டு, அங்கு வைத்து தனது வியாபாரத்தை செய்து வந்தார். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வைரங்களை வரி கட்டாமல் இந்தியாவுக்கு வாங்கியும் வந்தார்.

(தோட்டக்கள் பாயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் முதல் குப்பை இல்லா சமூகம்

ஜப்பானில் உள்ள 'கமிகட்சு' என்ற பகுதியிலுள்ள மக்கள் உலகின் முதல் குப்பை இல்லா (ஸீரோ வேஸ்ட்) சமூகம் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். கமிகட்சுவில் வசிக்கும் மக்கள் குப்பைகளை மிக நேர்த்தியாகக் கையாள்கிறார்கள். முதலில் குப்பைகளைத் தண்ணீரால் சுத்தம் செய்த பின்னா 34 பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்கள். காகிதம், அலுமினியம், பிளாஸ்டிக், கண்ணாடி, றப்பர், மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரிக்கிறார்கள். மக்கும் குப்பைகளை மக்க வைத்து, வீட்டுத் தோட்டத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். மற்ற குப்பைகள் அனைத்தும் மறுசுழற்சி மையத்துக்கு அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்தபோது மக்கள் எதிர்த்தனர். கொஞ்சம் கஷ்டப்பட்டனர். விரைவிலேயே 'ஸீரோ வேஸ்ட்' திட்டத்துக்குப் பழகிவிட்டனர். போத்தல் மூடிகளை தனியாகவும் போத்தல்களை தனியாகவும் போடும் அளவுக்கு விழிப்புணர்வு பெற்றுவிட்டனர். பழைய துணிகள், பிளாஸ்டிக் போன்றவற்றை வைத்து பொம்மைகள், அலங்காரப் பொருட்களைச் செய்துவிடுகிறார்கள். காய்கறி, பழக் கழிவுகளை மக்கும் குப்பைகளாக மாற்றி, செடிகளுக்கு உரமாக்கி விடுகிறார்கள். பயன்படுத்திய சில பொருட்களைக் கடைகளில் கொடுத்துவிட்டு, புதிய பொருட்களை கூடுதல் கட்டணம் இன்றி இங்கே வாங்கிக்கொள்கிறார்கள். வீட்டு உபயோகத்திலிருந்து தொழிற்சாலை வரை கழிவு மேலாண்மை திறம்படச் செய்யப்படுகிறது.

பழைய வீடுகளை இடித்தால், அதில் கிடைக்கும் பொருட்களை வைத்தே புதிய வீட்டைக் கட்டி விடுகிறார்கள். கமிகட்சு நகரில் 1,700 மக்கள் வசிக்கின்றனர். 80 சதவீத கழிவுகள் மறுசுழற்சிக்குச் சென்றுவிடுகின்றன. 20 சதவீத கழிவுகள் உரமாக மண்ணுக்குச் சென்றுவிடுகின்றன. கடந்த 13 ஆண்டுகளாக கழிவுகளைக் கையாள்வதில் நாங்கள் சிறந்தவர்களாக மாறிவிட்டோம். 'ஸீரோ வேஸ்ட்' கல்வி நிலையத்தையும் நாங்கள் நடத்தி வருகிறோம். பாடசாலை மாணவர்கள், வெளிநாட்டினர் ஆண்டு முழுவதும் இங்கே வந்து, கழிவு மேலாண்மையைக் கற்றுக்கொண்டு செல்கிறார்கள் என 'கமிகட்சு' கல்வி நிலையத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.




# ஒரு டொலர் வாடகைக்கு அமெரிக்காவில் வீடு

அமெரிக்காவின் 'ரெக்சாஸி'ல் வசிக்கும் தொழிலதிபரான 'ரோன் ஸ்டர்ஜென்' விடுமுறைக்காக ஜமைக்காவுக்கு சென்றிருந்தபோது, 'ரெக்சாஸி'ல் புயல் வீசியதால் அதிகமான வீடுகள் சேதமடைந்து விட்டன. ரெக்சாஸிற்கு திரும்பி வந்த ஸ்டர்ஜென் மக்கள் தங்க இடம் இல்லாமல் கஷ்டப்பட்டமையைக் கண்டு அதிர்ந்து போனார். 2 மில்லியன் டொலர்கள் பெறுமதியுள்ள தனது 2 வீடுகளை தங்குவதற்கு இடம் இல்லாதவர்களுக்காகத் திறந்துவிடுவதாக முகப்புத்தகம் மூலம் தெரிவித்தார். பல குடும்பங்கள் தங்குவதற்காக அவரது வீடு தேடி வந்தன. மாதம் ஒரு டொலர் வாடகைப்படி 3 மாதங்கள் அந்த குடும்பங்களைத் அங்கே தங்க வைத்தார்.

இந்த வீட்டின் வெளிப்பகுதியிலுள்ள 10 கார்க் கராஜ்களில் அவர்களது உடைமைகளை வைப்பதற்கு அனுமதியளித்தார். அவர்கள் வேறு வீடு தேடுவதற்கு வசதியாகத் தனது கார்களையும் கொடுத்து உதவினார். ஸ்டர்ஜெனின் இந்தச் செயலைப் பாராட்டி, இணையதளங்களில் செய்திகள் வந்துகொண்டே இருந்தன. புயல் வீசிய வேளை தான் அங்கு இருக்கவில்லை எனவும்செய்திகளில் பார்த்துதான் தெரிந்துகொண்ட போதும் இங்கே வந்தபோது நினைத்ததை விட நிலைமை மோசமாக இருந்ததாகவும் தங்குவதற்கு ஒரு வீடு இருந்தால்தான். அவர்களால் மீண்டு வருவதற்கு யோசிக்கவே முடியும். எனவே எனது வீட்டை விற்க இருந்த எண்ணத்தைத் தள்ளி வைத்துவிட்டுவீடற்றவர்கள் தங்கிக் கொள்ள இடம் அளித்ததாகவும் தங்குபவர்களுக்கு இலவசமாக இருக்கிறோம் என்ற சங்கடம் வரக்கூடாது என்பதற்காக ஒரு டொலர் வாடகை அறவிடுவதாகவும் தொவித்த ஸ்டர்ஜென் இந்த விஷயத்தை வெளியே தெரியப்படுத்தினால் தன்னைப் போல பலரும் உதவக்கூடும் என்பதாலேயே முகப்புத்தகத்தில் வெளியிட்டதாகவும் தொவித்துள்ளார்.

சிலர் இந்தச் செயலைப் பாராட்டுகின்ற அதேவேளை பலரும் இத்தனை அழகான வீட்டை இப்படிக் கொடுத்திருப்பது பைத்தியக்காரத்தனம் என்கிறார்கள். எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை. என்னால் முடிந்த சிறிய உதவியை செய்ய முடிந்ததில் மகிழ்ச்சிதான் எனத் தொவித்துள்ளாா.

3 மாதங்களுக்குப் பிறகு வீட்டை விற்கப் போகிறேன். வீடு இழந்தவர்களுக்குத்தான் முன்னுரிமை. விலையையும் கணிசமாகக் குறைத்துவிடுவேன் என்கிறார் ஸ்டர்ஜென். சின்ன வயதில் வறுமையில் மிகவும் கஷ்டப்பட்ட ஸ்டர்ஜென் கஸ்டத்தின் மத்தியில் படித்து, தொழிலதிபராக மாறியிருக்கிறார். வீடற்றவர்களின் கஷ்டம் அவரை விட வேறு யாருக்குப் புரியும் என அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளார்கள்.



# பனிக்கட்டி விடுதி

ஸ்வீடனில் 4 ஆயிரம் தொன் பனிக்கட்டிகளை வைத்து தங்கும் விடுதியைக் கட்டியிருக்கிறார்கள். 50 அறைகள் கொண்ட இந்தப் பெரிய விடுதியை 2 மாதங்களில் கட்டி முடித்திருக்கிறார்கள். விடுதிக்குள் நுழைந்த உடனேயே 3 அடி உயரம் கொண்ட ஆப்பிரிக்க யானையின் பனிச் சிற்பம் வரவேற்கும். ஒவ்வோர் அறைக்கும் சுரங்கப் பாதையின் மூலமாகத்தான் செல்ல வேண்டும். டிசம்பரிலிருந்து ஏப்ரல் வரை இந்த விடுதி திறந்திருக்கும்.

11 ஆயிரம் மக்கள் இங்கே வந்து தங்கிச் செல்வார்கள். பனிக்கட்டிகளால் ஆன அறை, கட்டில் என்று இருந்தாலும் குளிரைத் தாங்குவதற்கான அத்தனை அம்சங்களும் இங்கே செய்யப்பட்டிருக்கின்றன. பனிச் சிற்பங்களை ரசிப்பதற்கும் பனிக் கட்டிடங்களில் தங்குவதற்கும் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 492 7419


## விஞ்ஞானத் துறைசார் கல்விக்கு மாணவரை ஈர்ப்பது அவசியம்

உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்களில், விஞ்ஞானத்துறையை தேர்ந்து எடுப்போரின் எண்ணிக்கை,இப்போது வடமாகாணத்தில் வெகுவாகக் குறைந்து வருகிறது.

அது குறித்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

பட்டதாரி ஆவதற்கு இலகு வழி, கலைத் துறையே என்ற தப்பான எண்ணப் போக்குடன் , அதனைத் தேர்ந்து எடுக்கிறார்கள் என்றும் செயலாளர் ஆர்.ரவீந்திரன் சுட்டிக்காட்டி உள்ளார்.

விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளில், வேலைவாய்ப்புக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. ஆனால், உயர்தர மாணவர்களில், இருபது சதவீதமானோர் மட்டுமே கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறைகளைத் தெரிவு செய்கிறார்கள்.

உதாரணத்துக்கு, க.பொ.த. உயர்தரத் தேர்வில் விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்றவர்களே தாதியர் கற்கை நெறியைக் கற்பதற்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். ஆயினும் அந்தப் பிரிவில் தகுதியானோர் இல்லாமையால் கலைத் துறை மற்றும் வர்த்தகத்துறைகளில் சித்தி அடைந்தவர்களையும் உள்வாங்க நேரிட்டது.

எனினும், அதன் விளைவு பாரதூரமானதாக மாறியது. விஞ்ஞானப்பிரிவில் சித்தி பெற்றவர்கள் அன்றி ஏனைய தரப்பினரை உள்வாங்குவதால், தரம் குறைந்த பயிற்சி பெற்றவர்களே பணி புரியும் நிலை மேலெழுந்துள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டவேளை, போதிய தகைமை உள்ளவர்களின் பற்றாக்குறை புலப்பட்டது.

அதனூடு, விஞ்ஞான அறிவில் தகுதி உள்ளவர்களின் தேவையை உணர்த்துவதை, சுட்டிக் காட்டும் தன்மை வெளிப்படுகிறது அல்லவா?

கலைப்பிரிவை அல்லது வர்த்தகப் பிரிவை தமக்கான நாட்டமுள்ள ஒன்றாகக் கைக்கொள்வதை தவறு அல்லது தப்பு என்று எவரும் வியாக்கியானம் செய்யலாகாது.

எனினும், இன்றைய தேவைகளைக் கருத்தில் கொண்டால், வேலைவாய்ப்புக்களை சுலபமாகப் பெறுவதற்கு கணித, விஞ்ஞானத்துறைகள் பெரிதும் உதவும் என்பது நிதர்சனம்.

விஞ்ஞானம் சார்ந்த துறைகளைக் கற்கும் மாணவர்களின் வீதத்தை, இப்போது நாற்பதாக உயர்த்த வேண்டும் என்று பரிந்துரைத்துச் செயல் வடிவம் கொடுப்பதற்கு வகை செய்வது பிரதானம்.

அதுவே , எமது பிராந்தியத்தின் வருங்கால வளர்ச்சிக்கு வழி செய்வதற்குப் பேருதவியாக அமையும்.



## ஊடகத்துறை புனிதமாக இருக்கவேண்டும் என்பதில் முன்னிலை வகித்தவர் கே.கே.ஆர்.

- சூரன்.ஏ.ரவிவர்மா

அறுபது ஆண்டுகாலமாக, மூன்று தலைமுறைகளுடன் ஊடக உலகில் பணியாற்றிய ஆசிரியர் கே.கே.ஆர். என அன்புடன் அழைக்கப்பட்ட குமாரவேலு கந்தர் இரத்தினசிங்கம் தமது 87ஆவது வயதில் காலமானார். பத்திரிகை உலகில் புதிய உரை நடையை அறிமுகப்படுத்தியதில் இவரின் பங்களிப்பு அளப்பரியது. பத்திரிகை உலகின் ஜாம்பவானான காலஞ்சென்ற எஸ்.டி.சிவநாயகத்தின் வலதுகரமாக நான்கு தசாப்தங்களுக்கு மேல் பணியாற்றிய இவர், 'சுதந்திரன்', 'வீரகேசரி' பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும், 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் 'சுடர்ஒளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் நீண்டகாலம் பணியாற்றியிருந்தார். எஸ்.டி.சியின் நிழலாகச் செயற்பட்டவர். கண்டிப்பு, நேர்மை என்பனவற்றின் மூலம் பத்திரிகை உலகில் தனக்கென ஒரு வழியைப் பின்பற்றியவர். எஸ்.டி.சிவநாயகத்தைப் போன்று ஊடக வெளிச்சம் தன்மீது படாமல் பாதுகாத்தவர்.

உடுப்பிட்டி இமையாணனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவார். தமிழ்ப் பத்திரிகை உலகில் சுமார் 60 ஆண்டுகள் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இவர், பல மூத்த தமிழ் ஊடகவியலாளர்களை உருவாக்கியுள்ளார்.

பத்திரிகையாளர்களை திருப்திப்படுத்துபவர்கள் இவரை நெருங்க முடியாது. பட்டம் பதவி என்பனவற்றைத் தேடிப்போகதவர். புதியவர்களுக்கு செய்தி எழுதும் நுணுக்கங்களை சொல்லிக்கொடுத்து முன்னேற்றியவர். வெறும் தலையாட்டிப் பொம்மையாக இருக்காது பத்திரிகை தரத்தை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றியவர்.

செய்தியை எழுதிவிட்டு இவரிடம் கொடுப்பவர்கள் நெருப்புச்சட்டியின் மீது நிற்பது போல தவிப்பார்கள். பல சந்தேகங்களைக் கேட்டு அவற்றுக்கு சரியான பதிலளித்தால்தான் அந்தச் செய்தியைப் பிரசுரிக்க அனுமதிப்பார். செய்தியின் தரம் முக்கியமாக இருக்க வேண்டும் என்பதோடு, தவறான செய்தி பிரசுரிக்கப்படக்கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக கவனமாக இருப்பார்.

கொழும்பில் தமிழ் மக்கள்மீது கெடுபிடிகள் அதிகரித்தபோது 'சுடர்ஒளி' வெளியானது. சிங்கத்தின் கோட்டையில் புலிப்பாய்ச்சலுடன் வெளியான 'சுடர்ஒளி'யின் மீது அரசாங்கம் ஒரு கண் வைத்திருந்தது. அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பனவற்றை துணிவுடன் எதிர்நோக்கி 'சுடர்ஒளி'யை வாசகர்களின் அபிமானப் பத்திரிகையாக வளர்த்து எடுத்ததில் இவரது பங்களிப்பு மிகமுக்கியமானதும், காத்திரமானதும் ஆகும்.

பத்திரிகை உட்பட ஊடகத்துறை மிகவும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக உழைத்த ஜாம்பவான் கே.கே.ஆர்.இலங்கையில் ஊடகவியலாளர்கள் வேட்டையாடப்பட்டபோது, தலைநகரில் துணிச்சலுடன் பணியரற்றியவர். பத்மசீலன், வித்தியாதரன், சிவகுருநாதன், டேவிட், இரா.புத்திரசிகாமணி போன்ற மூத்த பத்திரிகையாளர்களும் தெய்வீகன், வாசிங்டன், தினேஷ் போன்ற இளைஞர்களும் இவருக்கு பக்க பலமாக இருந்தனர்.



## தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கு வித்திட்ட தமிழாராய்ச்சி மாநாடு

தமிழின் பெருமைகளை உலகறியச்செய்யும் நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டபோது இலங்கைத் தமிழர்கள் , பேருவகை அடைந்தனர். கோலாலம்பூர், சென்னை, பாரிஸ் ஆகிய நகரங்களில் நடைபெற்ற முதல் மூன்று தமிழா ராய்ச்சி மாநாடுகள் குறித்து அறிந்த இலங்கைத் தமிழ் மக்கள் நம்நாட்டில் நடைபெறப்போகும் தமி ழாராய்ச்சி மாநாட்டைப் பார்ப்பதற்கு ஆர்வமாக இருந்தார்கள். ஆனால் இலங்கை அரசாங்கத்தின் தடைகளை உடைத்து யாழ்ப்பணத் தில் நடந்த நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு தமிழர் வாழ்வில் சோகத்தையே உண்டாக்கியது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் 10 ஆம் திகதியன்று வீரசிங்கம் மண்டபத்தில் பரிசளிப்பும் விருந்தினர் உபசாரமும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியிருந்தவேளை, பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான முறுகல் நிலையைத்தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மின்கம்பிகள் அறுந்து விழுந்ததில் ஒன்பது பேர் பலியானார்கள். 42 வருடங்கள் கடந்தும் அந்த வடு இன்றும் மனதை வாட்டுகின்றது.

புதுடில்லியில் 1974 ஆம் ஆண்டு 26 ஆவது அகில உலக கீழைத்தேய கல்வி ஆய்வாளர் மாநாடு நடைபெற்றது. அங்கு அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் உருவாகியது. தமிழ் திராவிட ஆய்வுகளில் ஆர்வம் உள்ளவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களும் இணைந்து இதனை உருவாக்கினர். பேராசிரியர் தனிநாயக அடிகளார். பேராசிரியர் வா.ஐ.சுப்பிர னியம் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட 26 பேர் இணைந்து தமிழாராய்சி மன்றத்தை உருவாக்கினர். அவர்களில் பேராசிரியர் தனிநாயக அடிகளார், பண்டிதர் க. கணபதிப் பிள்ளை. க.பொ.இரத் தினம் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடை பெறும் என அறிவிக்கப் டபோது அப்போது பிரதமாக இருந்த ஸ்ரீமாவோ பண்டர நாயக்கா அரச ஆதரவுடன் கொழும்பிலே நடத்த விரும்பினர். முன்னைய மூன்று மாநாடுகளும் அந்தந்த நாட்டு அரசுகளின் ஆதரவில் நடைபெற்றன. 1970 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவேண்டிய தமிழாராய்ச்சி மாநாடு அன்றைய அரசாங்கத்தின் கெடுபிடிகளினால் தள்ளிப்போனது. 1970 ஆம் ஆண்டு பல்கலைக் கழக தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மாணவர்களின் கல்வியை அது தடை செய்தது. அரசின் மீது தமிழ் மாணவர்களும் மக்களும் கடும் சீற்றரத்தில் இருந்தனர். தமிழ் மக்களைத் திருப்திப் படுத்துவதற்காக தமி ழாராய்ச்சி மாநாட்டை நடத்த அரசாங்கம் முன்வந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழு யாழ்ப்பணத்தில் நடத்த திடசங்கற்பம் பூண்டது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை


இடமிருந்து: பேராசிரியர் ரி.புறோ, பேராசிரியர் எஸ். தனிநாயகம் அடிகளார், கலாநிதி கே.மகாதேவ சாஸ்திரி, பண்டிதர் கே.பி. இரத்தினம் மற்றும் பேராசிரியர் எப்.வி.கே. கூயூப்பர்.

நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீமா அரசாங்கத்தில் சக்தி மிக்க அமைச்சராக இருந்த செல்லையா குமார சூரியர் மற்றும் அல்பிரட் துரையப்பா ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து முட்டுக் கட்டை போட்டனர். தமிழாராய்ச்சி மாநாட்டுக் காக வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விஸா வழங்காமல் அரசு இழுத்தடித்தது. எனினும் அரசாங்கத்தின் தடைகளை உடைத்தெறிந்து யாழ்ப்பணம் விழாக்கோலம் பூண்டது.


சென்னையில் 1968 ஆம் ஆண்டு நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஒளிப்படம்.

தென்னங்குருத்து, மாவிலை தோரணம், பனை, தென்னை, வாழை என்பனவற்றால் யாழ்ப்பணம் புதுப்பொலிவு பெற்றது. கோயில் திருவிழாவில் கட்டப்படும் சிகரங்கள் சந்திகளை அலங்கரித்தன. மின் அலங்காரத்தினால் பகல் போல் ஒளிர்ந்தது இரவு. வீரசிங்கம் மண்டபத்திலும் றிம்மர் மண்டபத்திலும் ஆய்வு அமர்வுகள் நடைபெற்றன. திறந்த வெளி அரங்கில் கலைநிகழ்ச்சிகளும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தமிழர் பண்பாட்டு பொருட் காட்சியும் நடைபெற்றன.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் இருந்து ஆரம்பமான வாகனப்பேரணி தமிழர் கலாச்சாரத்தையும் பெருமைகளையும் விளக்கின. இலங்கைத் தமிழர் வரலாறுப் பெருமைகள் என்பன பேரணி வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. மாலையில் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூடினர். மக்கள் வெள்ளம் அலை மோதியதால் மண்டபத்துக்கு வெளியே மேடை அமைக்கப்பட்டு விழா நடைபெற்றது.

இலங்கை அரசால் விஸா மறுக்கப்பட்ட இரா.ஜனார்த்தனன் இறுதி நாள் பேசுவதற்காக இந்தியாவில் இருந்து கடல் வழியாக வந்திருந்தார். அப்போது யாழ்ப்பாண நகரத்திலிருந்து பொலிஸ் நிலையம் செல்ல, பொலிஸ் ஜீப் ஒன்று வந்தது. வீதியில் மக்கள் திரண்டிருந்ததனால் பொலிஸ்ஜீப் செல்ல முடியாது தரித்து நிற்க நேர்ந்தது. பொலிஸ் உயர் அதிகாரியான சந்திரசேகரவுக்கு மக்கள் வழி விடவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பொலிஸார் கண்டபடி சுட்டனர். அப்போது மின் கம்பிகள் அறுந்து விழுந்தன. கூடி இருந்த மக்கள் சிதறி ஓடினர். அழுகுரல்களும் அவல ஓலங்களும் இறுதிநாளில் அரங்கேறின. இந்த களேபரத்தில் ஒன்பதுபேர் உயிரிழந்தனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 14 வயதான நந்தகுமார், தொல்புரத்தைச் சேர்ந்த 15 வயதான கேசவராசன், நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த 20 வயதுடைய சிவானந்தன், நாயன்மார்கட்டைச் சேர்ந்த 27 வயதுடைய தேவரத்தினம், பளையைச் சேர்ந்த 28 வயதுடைய யோகநாதன், கோப்பாயைச் சேர்ந்த 54 வயதுடைய பொன்னுத்துரை, நாயன்மார்கட்டைச் சேர்ந்த 60 வயதுடைய ஆறுமுகம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 60 வயதுடைய சிங்கமணிங்கம் மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த சரவணபவன் ஆகியோர் மரணமானார்கள். பலர் காயமடைந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டு மரணம் அரசாங்கத்துக்குக் கோபத்தை உண்டாக்கியது. நடந்த துயரத்துக்காக அரசாங்கம் மனவருத்தப்படவில்லை. இலங்கை அரசங்கத்தை விட்டு தமிழ் மக்கள் தூரவிலகிச்செல்ல இதுவும் ஒருகாரணம். இலங்கை அரசாங்கம் தம்மை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாக உணர்ந்த தமிழ் மக்கள், அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். அப்போது அனா செனவிரட்ன பொலிஸ் மாஅதிபராக இருந்தார். பின்னர் தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்குவதில் இவர் ஆர்வம் காட்டினார்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த ஒன்பது போரின் ஞாபகார்த்தமாக வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. விஷமிகளால் பலமுறை இடித்து வீழ்த்தப்பட்ட தூபி இன்றும் புது மெருகுடன் காட்சியளிக்கிறது.

ஜனவரி பிறந்தால் யாழ்ப்பாணத்தின் முதல் நிகழ்ச்சியாக தூபியில் அஞ்சலி செலுத்துவதில் தமிழ்த்தலைவர்கள் ஆர்வம் காட்டுவர்கள். வருடாந்த நிகழ்ச்சியான அஞ்சலி செலுத்துவது நின்றுவிட்டது கவலைக்கு உரியது. அந்த இடத்துக்குரிய புனிதத்தை பேணிக் காப்பாற்ற கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். தூபியை அண்மித்து கலாசாரச் சீரழிவு நடைபெறுவதைத் தடுப்பது தமிழ் மக்களின் தவிர்க்கக் கூடாத கடமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை நேரத்து மயக்கம்

அடுத்தடுத்து இரண்டு தோல்விப் படங்களால் துவண்டுப் போன இயக்குநர் செல்வராகவன், தனது ரெகுலர் பார்மெட்டான காதல் கதையை மீண்டும் கையில் எடுத்து வெற்றிக் கொண்டுள்ளார். ஆனால் இந்த முறை இயக்குநராக அல்ல கதையாசிரியராக. இந்த படத்தை செல்வராகவனின் மனைவி கீதாஞ்சலி இயக்கியுள்ளார்.

பெண் இயக்குநர்கள் இயக்கும் படங்களின் வரிசையில் இல்லாத, இந்த படத்தை இயக்க முன் வந்ததற்காகவே கீதாஞ்சலியை பாராட்டியாக வேண்டும்.

பெண்களுடன் பழகாத ஆண், திடீரென்று ஒரு பெண் மீது வெறித்தனமாக காதல் வர, அந்த பெண்ணோ அவனை உதாசினப்படுத்தி வர, இறுதியில் என்ன ஆனது, என்பது தான் செல்வராகவனின் கதையாக இருக்கும். இந்த கதையும் அப்படி தான். ஆனால், இதில் இருவரும் கணவன் - மனைவி ஜோடிகளாக இருக்கிறார்கள்.

'டேட்டிங்', 'போய் பிரண்ட்' என்பதெல்லாம் சகஜம் என்ற மனநிலையில் வாழும் நாயகிக்கும், திருமணத்திற்குப் பிறகே அனைத்தும், என்று அப்பாவித்தனமாக வாழும் நாயகனுக்கும், பெற்றோர்கள் திருமணம் செய்து வைக்கிறார்கள். பெற்றோர்கள் பார்த்து வைத்த பெண் என்றாலும், அழகு தேவைதான் கிடைத்திருக்கிறாள், என்ற மகிழ்ச்சியில் முதல் இரவு அறைக்குள் நுழையும் ஹீரோவுக்கு, நாளைக்கு பார்க்கலாம் என்ற ஷாக் கொடுக்கிறார் நாயகி. இது அன்றோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது மட்டும் இன்றி, நாயகிக்கு பாய் பிரண்ட் இருப்பது, பார்ட்டி என்று சுற்றுவது சுன்ற பல பழக்கங்கள் இருப்பது ஹீரோவுக்கு தெரிந்தாலும், அவர் நாயகியை வெறித்தனமாக காதலிக்க, நாயகியோ அவரை வெறித்தனமாக வெறுக்கிறார்.

இப்படிக் கரடுமுரடான பாதையில் பயணிக்கும் இவர்களுடைய வாழ்க்கை இறுதியில் என்ன ஆனது? ஹீரோவின் காதலை ஹீரோயின் புரிந்துக்கொண்டாரா இல்லையா, என்பதை செல்வராகவனின் கைவண்ணத்தில் சொல்லப்பட்டிருப்பது தான் 'மாலை நேரத்து மயக்கம்'.



- ஜெ.சுகுமார்



ஹீரோ புதுமுகம் பாலகிருஷ்ண கோலா, கதாபாத்திரத்திற்கு ஏற்ற நடிகராக இருக்கிறார். இருப்பினும், முகத்தில் எந்தவிதமான 'ரியாக்ஷ'னும் இன்றி தடுமாறுகிறார். நடிப்பு, நடனம் என்று அனைத்துமே ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதால், அடுத்தடுத்த படங்களில் பாலகிருஷ்ணா சற்று கவனம் செலுத்தினால் நன்று.

நாயகி வாமிகா, கம்பீரமான அழகியாக ரசிகர்களை கொள்ளை கொள்கிறார். மிடுக்கான நடிப்பு, கண் சிமிட்டாத வசன உச்சரிப்பு, என்று தனது கதாபாத்திரத்திற்கான திமிர், ஈகோ போன்றவற்றை ரொம்ப இயல்பாக நடிப்பில் வெளிப்படுத்துகிறார்.

வாமிகாவின் அம்மா வேடத்தில் நடித்தவர், அழகம் பெருமாள் என அனைவரும் சீரியல் நடிகர்களைப் போல நடித்துள்ளார்கள்.

ஸ்ரீதரின் ஒளிப்பதிவும், அம்ரித்தின் பின்னணி இசையும் திரைக்கதையுடன் ரசிகர்களை ஒன்றச் செய்ய பாலமாக அமைந்துள்ளது. மாலை நேரத்து மயக்கம், பாடல் திரும்ப திரும்ப கேட்க வைக்கிறது.

பெண் இயக்குநரான கீதாஞ்சலி, ஆண்மையின் வலியை எதார்த்தமாக சொல்லியிருந்தாலும், சற்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். அதிலும், நாயகியின் அம்மா பேசும் சில வசனங்கள், சில காட்சிகள் ஆகியவை, ரசிகர்களை முகம் சுழிக்க வைக்கிறது.

இருப்பினும், செல்வராகவனின் எழுத்தில் உள்ள காதலின் வலியை, இயக்குநர் கீதாஞ்சலி, தனது காட்சிகளின் மூலம் அழகாகவே சொல்லியிருக்கிறார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசாத்



# கொடுக்கும் இடது கையும் பறிக்கும் வலது கையும்

**வ**லது கை கொடுப்பதை இடது கை அறியாத வகையில் இருக்க வேண்டும் எனத் தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்யும் போது தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் வகையில் இல்லாமல் நல்ல நோக்கத்துடன் செய்ய வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். ஆனால் பெரும்பான்மையான உதவிகள், கூட்டம் போட்டு, ஒலிபெருக்கியில் அறிவித்துப் பெரும் ஆர்ப்பாட்டத்துடனேயே இப்போது உதவிகள் வழங்கப்படுகின்றன.

கடந்த போரின் போது படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான பாரம்பரியக் காணிகளைப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டு வழங்கப்படும் போது கூட ஏதோ ஒரு பெரும் வரப்பிரசாதத்தை வழங்குவது போன்று காண்பிக்கப்பட்டு விழாக்கள் எடுக்கப்பட்டே வழங்கப்படுகின்றன.

வலிகாமம் வடக்கின் தமிழ் களின் காணிகளை வழங்கக் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அரச தரப்பும், படைத்தரப்பும் பிடிவாதமாக மறுத்து வந்தன. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மிகவும் குறுகிய காலத்திலேயே 1000 ஏக்கர் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அப்பகுதிக்கு விஜயம் செய்து காணிகளை உத்தியோகபூர்வமாக விடுவிக்கவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

ஒருகை கொடுப்பதை மறுகை பறிப்பதற்கான தயாரிப்புக்கள் ந்து கொண்டிருக்கின்றன என்பது முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விடயம்.

அதாவது வலி. வடக்கில் மக்களின் 700 ஏக்கர் நிலம் மக்களிடம் திரும்பவும் கையளிக்கப்படும் போது முல்லை மாவட்டம் வட்டு வாகலில் தமிழ் மக்களின் பாரம்பரியக் காணிகளை நிரந்தரமாகவே கடற்படையினர் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மையில் முல்லைத் தீவுக்கு விஜயம் செய்த பாது காப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் முன்னிலையில் காணி உரிமையாளர் களை அழைத்து கடற்படை முகாம் அமைப் பதற்காக அக்காணி களைக் கையகப் படுத்தவுள்ள தாகத் தெரிவித்தார். 626 ஏக்கர் காணிகள் கடற்படை யினருக்கு வழங்கப்பட வுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் 276 ஏக்கர் அரசாங்கக் காணிகள். ஏனைய 350 ஏக்கர் காணிகளும் அப்பகுதி மக்களின் பாரம்பரிய காணிகள். கடற்படை முகாம் அமைப்பதற்கு 50 ஏக்கர் காணி போதுமானதெனத் தெரிவிக்கப்படுகிறது. அதை 276 ஏக்கர் அரச காணியிலிருந்தே பெற்றுக் கொள்ள முடியும். அப்படியிருக்கும் போது தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்க முயல்வது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. கடற்படை முகாமுக்கான 50 ஏக்கர் போக மிகுதிக் காணி ஏன் கடற்படை யினருக்கு வழங்கப்படுகிறது என்பது தான் முக்கியமான கேள்வி.

மன்னார் மாவட்டத்தின் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி, சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம், தமிழ் மக்களின் காணிகள் கடற்படையினரால் முகாம்கள் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அங்கு போர்க்காலத்தில் சேதமடைந்த தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் கடற்படையினரால் முகாம்கள் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அங்கு போர்க்காலத்தில் சேதமடைந்த தமிழ், முஸ்லிம் மக்களின் வீடுகள் திருத்தியமைக்கப்பட்டு அவற்றில் கடற்படையினரின் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. அமைச்சர் ரிசாட் பதியூதீன் அந்த முஸ்லிம் மக்களின் சொந்தக் காணிகளை மீட்டு அவற்றில் அவர்களை குடியேற்ற விடாமல் ஜனாதிபதி செயலணியின் அனுசரணையுடன் வேறு இடங்களில் காடுகளை வெட்டிக் குடியேறியுள்ளனர்.

தற்சமயம் அக்காணிகள் வில்பத்து சரணாலயத்துக்கு உரியவை எனக் கூறப்பட்டு அவர்களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


ஆனால் அந்த மக்களின் சொந்தக் காணிகளில் கடற்படை முகாம்களும், கடற்படையினரின் குடும்பங்களுக்கான குடியிருப்புக்களும் நிலைபெற்று விட்டன.

ஒட்டுமொத்தத்தில் அந்த மக்களின் காணிகள் பறிக்கப்பட்டதுடன் அவர்களின் பிரதான வாழ்வாதார மூலமான சிலாவத்துறை மீன்பிடி மையமும் பறிக்கப்பட்டு விட்டது.

எனவே வட்டுவாகலில் கடற்படை முகாம் அமைக்க 50 ஏக்கர் போதுமானதாக இருந்த போதும் அவர்களுக்கு 626 ஏக்கர் காணிகளை வழங்குவது நிச்சயமாக கடற்படையினர் குடும்பங்களின் குடியிருப்புக்கள் என்ற பெயரில் சிங்களக் குடியேற்றத்தை நிறுவும் நோக்கம் கொண்டது என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. வட்டுவாகல் இலங்கைக்கு அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் "றால்" பெருமளவில் உற்பத்தியாகும் மையங்களில் ஒன்றாகும். இங்கு நிலம் பறிக்கப்படுவதுடன் மட்டுமன்றி ஒரு வாழ்வாதார மூலமும் பறித்தெடுக்கப்படுகிறது.

ஏற்கனவே மண்கிண்டிப் பகுதியில் தொல்பொருட் திணைக்களத்தின் காணி எனக் கூறப்பட்டு முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொக்கிளாயில் இந்துக் கோவில் காணி, மருத்துவமனைக்காணி என்பன அபகரிக்கப்பட்டு பெரும் விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. கொக்குத் தொடுவாய் மக்களுக்கு வழங்கப்பட்ட வயற்காணிகளும், கருநாட்டங்கேணி மக்களின் பரம்பரைக் காணிகளுமான 2000ஏக்கர் வளமான பூமி மகாவலி, 'எ6' வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டு சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன.

இப்பிரச்சினைகளை உற்று நோக்கினால் எல்லைப்புற மாவட்டங்களான முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் மெல்ல மெல்ல வெவ்வேறு வடிவங்களில் சிங்கள மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைப் புரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் – 57

வண்டி புறப்படுவதற்கும் ஒரு புரட்சி வீரன் குண்டடிபட்டு ஓடி வருவதற்கும் சரியாக இருந்தது. தனது வண்டியை நிறுத்தச் சொல்லி அவனையும் ஏற்றிக் கொண்டார் காஸ்ட்ரோ.

தப்பியோடிய புரட்சி வீரர்கள் சிலரே. பலர் முகாமுக்கு உள்ளேயே மாட்டிக் கொண்டனர். சிறைப்பட்ட அனைவரையும் அதே இடத்தில் சுட்டுப் பொசுக்கியது இராணுவம். மற்றொரு புறம் ரால் காஸ்ட்ரோவும் அவரது ஆள்களும் படிகள் வழியாக கீழே ஓடி வந்த போது துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின. கண்ணில் பட்ட வீரர்களைத் தாக்கி வீழ்த்திய புரட்சி வீரர்கள் தம்மால் முடிந்த துப்பாக்கிகளைக் கைப்பற்றிக் கொண்டனர்.

ஆபேல் சாண்டமாரியா பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்தார். காஸ்ட்ரோ உள்பட மற்ற வீரர்கள் என்ன ஆனார்கள் என்றே அவருக்குத் தெரியவில்லை. மிக மிகக் குழப்பமான ஒரு சூழலில் சிக்கிக் கொண்டிருந்தார்.எய்டி, மெல்பா இருவரும் அவருடைய குழுவைச் சேர்ந்தவர்கள் . பெண்கள் என்பதால் மருத்துவமனைக்குள் புகும் பணி இந்த இருவருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் குழப்பத்தில் இருந்தனர்.



ஆபேல் ஒரு முடிவுக்கு வந்தார்.

'எய்டி, மெல்பா இருவரும் உடனே இங்கிருந்து வெளியேறுங்கள். நிலைமை இங்கு சரியில்லை. நாம் போட்டு வைத்த திட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்று தெரியவில்லை. நீங்கள் இருவரும் தப்பிச் செல்வது தான் சரி'

"அப்படியானால் நீங்கள்?"

"எனக்குச் சில பணிகள் இருக்கின்றன.நீங்கள் கிளம்புங்கள்"

"எங்களுக்கு மட்டும் பணிகள் இல்லையா?"

"எய்டி, இது விவாதிக்க வேண்டிய சமயம் அல்ல. நீங்கள் கிளம்பலாம். கடைசிக் குண்டு மிச்சமிருக்கும் வரை நான் சண்டை போட்டு விட்டு வருகிறேன்.

கையசைத்து விட்டு வேகவேகமாக ஓடினார் ஆபேல். எய்டி, மெல்டா இருவரும் ஓடினர். வெளியே தப்பியோடுவதற்காக அல்ல! அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக .ஆபேலால் அவர்களைத் தடுக்க முடிய வில்லை. மூவரும் ஒன்றாக மருத்துவமனைக்குள் நுழைந்து விட்டனர். அங்குள்ள மருத்துவர்களுக்கும் ஆயாக்களுக்கும் முன்னரே விஷயம் சென்றடைந்திருந்தது. ஆனால் ஆச்சரியம்! அவர்கள் இந்த வீரர்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக, அவர்களைப் பாதுகாக்கவே விரும்பினார்கள். ஆபேலின் கண்ணையும் நெற்றியையும் சேர்த்துக் கட்டுப் போட்டனர். பிறகு, காலியாக இருந்த ஒரு படுக்கையில் அவரைப் படுக்க வைத்து போர்வையால் மறைத்தனர். எய்டியும் மெல்பாவும் நர்ஸ் உடை அணிந்து கொண்டனர்.

விரைவில் இராணுவ வீரர்கள் மருத்துவ மனைக்குள் புகுந்தனர். ஒவ்வொரு கட்டிலையும் நெருங்கி நோயாளியை எழுப்பி,அவர்களது போர்வையை விலக்கிச் சரிபார்த்தனர்.முதலில் மாட்டிக் கொண்டது ஆபேல் தான்.'இங்கு தான் ஒளிந்திருக்கிறாயா?' என்று பலமாகக் கத்திய ஒரு வீரன் தனது துப்பாக்கிக் கட்டையால் ஆபேலை பலமாகத் தாக்கினான். மற்றொருவன் துப்பாக்கியால் மாறி மாறிக் குத்தினான். பிறகு அவர் முகத்தைச் சிதைத்தான். ஆபேல் அலறிய அலறல் கேட்டு எய்டியும் மெல்டாவும் துடிதுடித்துப் போனார்கள். அவர்களைக் கண்டு பிடிக்க அதிக நேரம் தேவைப் படவில்லை. இருவரும் தாக்கப்பட்டனர். பிறகு, தரதர வென்று இழுத்துச் சென்றனர். போகும் வழியில் ஒரு மனிதன் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருப்பதை எய்டியும் மெல்டவும் கண்டு துடித்துப் போனார்கள். எங்கோ பார்த்த முகமாக இருக்கிறதே என்று கண்களைக் கூர்மையாக்கிக் கவனித்த போது தான் தெரிந்தது அவர் ரால் கோமஸ் கார்சியா என்று. மொன் கடாத் தாக்குதல் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையில் காஸ்ட்ரோ இவரைத்தான் வெற்றி அறிக்கையை எழுதித் தரச் சொன்னார். மயக்கத்தில் இருந்த கார்சியா எழுந்திருக்க முயன்றார். ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து "அப்[illegible] நான் கைதாகி விட்டேன்' என்று எழுதினார். அதற்குள் காவலர்கள் அவரை நெற்றிப் பொட்டில் சுட்டுக்கொன்றனர்.

ஆபேல் குழுவில் இருந்த அனைத்து வீரர்களும் பிடிபட்டனர். அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். எய்டியும் மெல்டாவும் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஒரு இராணுவ வீரன் எய்டியை இழுத்து வந்தான். 'இந்தா இது தான் உன் அண்ணன்!' சிரித்தான். எய்டி நடுங்கினான். அவன் கையில் ஒரு கத்தி. அதிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆபேல் என்று சத்தம் போட்டுக் கத்தினாள்.அவன் பிடித்திருந்த கத்தியின் முனையில் ஆபேலின் கண் செருகப்பட்டிருந்தது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 707

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | ■ | |
| 11 | 12 | | ■ | 13 | | 14 | |
| 15 | | ■ | 16 | ■ | 17 | | ■ |
| | ■ | 18 | | 19 | | ■ | 20 |
| ■ | 21 | | | | ■ | 22 | |
| 23 | | | ■ | 24 | | | |

**மேலிருந்து கீழ்**

1.இது இன்னமும் நாட்டில் ஏற்படவில்லை.
2.உயிர்ப்பின் ஆரம்பம்.
3.கொடுக்கல் என்பதன் எதிர்ப்பதம்..
4.இராமயாணத்தில் கூனி. மகாபாரதத்தில் இவர்.
5.ஒருவருக்கு எதிராக அவர் அறியாத விதத்தில் தீட்டப்படுவது.
6.செருக்கு.
8.குலாவுதல்.
10.அந்தரி.
12.பீதி.
14.கிரங்களுள் ஒன்று.
16.பழையது அல்ல.
18.விடை.
19.உலோகத்தை மெல்லிய நீளமாய் வார்த்தால் வருவது.
20.இளம்பெண்.
21.அறிவு.
22.ஒரு நிறம்.

**இடமிருந்து வலம்**

1. ஒருவருடன் வைத்திருக்கும் தொடர்பு .
5.கூட்டல் குறி.
7. அருகில்.
8.ஒரு வகை ஆட்டம்.
9.பழுத்தல்.
11.சேலை.
13.முகவரி .
15உடலில் ஏற்படும் ஒரு நோய்த்தன்மை.
17.இது வரக் கூதலும் வரும்.
18.நாயன்மார் பாடியது.
21.நண்பகல்.
22.நிணம்.
23.சுவர்.
24.சேனாதிபதி.

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 707

சொற்சிலம்பம் போட்டி 707க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 பெப்ரவரி 03 மற்றும் பெப்ரவரி 10 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 704இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | வே.சுபிதா, உபதபாலக வளவு, புளியம்பொக்கணை, பரந்தன். |
| 2 ஆம் பரிசு | அ.பொ.திரவியநாதன், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை. |
| 3 ஆம் பரிசு | ஜெ.வெஸ்மிலா , இல 9/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத் தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 705க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.முதுகு.
2.கரும்பு.
3.துகில்.
4. திரு.
6. விரைவு.
9. மிகவும்.
11.பகைவர்.
13.தம்.
15.கூனல்.
16.அமுதம்.
18.சதகம்.
19.குண்டு.
21.சுண்.
22.பலம்.
24.மத.

**இடமிருந்து வலம்**

1.முகஸ்துதி.
5.சாவி.
7.துரு.
8.கிருமி.
10.கும்பல்.
12.கதவு.
14.புகை.
15.கூவும்.
17.வசனம்.
20.முகர்தல்.
22.பண்.
23.தண்.
24.மலடு.
25.சம்மதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருக்குள் கலந்த சாப்ளின் நகைச்சுவை

- பால்நிலவன்

உலகின் தலைசிறந்த நகைச்சுவை நாயகன் சார்லி சாப்ளின் நடித்த படம் 'The Kid'. வீதியில் கண்டெடுக்கும் ஒரு குழந்தையை அவர் எடுத்து வளர்க்கும் திரைக் கதையைக்கொண்டது. இந்தப் படம் முழுவதும் நகைச்சுவை நிரம்பி வழிகிறது.

அந்தக்குழந்தையை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் சாப்ளின் தடுமாறுவது, பின்னர் தாலாட்டிப் பாராட்டி. சீராட்டி. நெஞ்சுருக நேசிப்பது, குழந்தை தனது நகைச்சுவையான உடல்மொழியோடும் மிகவும் ரசிக்கத் தக்க செயல்களோடு வளர்வது பின் பாதிக்கதைக்கு அடிக்கட்டுமானமாய் அமைக்கின்றன.

சாளரங்களின் கண்ணாடிகளைச் சரிப் படுத்தும் தொழிலைச் செய்கிறார் சாப்ளின். அதுவும் எப்படி? தெருத்தெருவாகச் செல்லும் சிறுவன், அங்கு சாரளக் கண்ணாடிகள் மீது கற்களை விட்டெறிந்து சாளரங்களை உடைக்கிறான்.

வீட்டுக்காரர்கள் வந்து பார்க்கும் முன்னர் இவன் ஓடிவிடுவான். பின்னர் அவர்கள் எப்படி இதை சரிசெய்வது என்று பார்க்கும்போது, சாப்ளின் தனது புதிய கண்ணாடிகளோடும் சில கருவிகளோடும் அப்போதுதான் மெதுவாக அவ்வழியே வருவார், ஏதோ உண்மையிலேயே இந்த சம்பவம் பற்றி ஒன்றும் தெரியாத உண்மையான தொழில்காரரைப் போல.

ஒருமுறை பொலிஸாரிடம் இவர்கள் மாட்டிக்கொள்ளவும் நேரிடுகிறது. ஆனால் பொலிஸருக்கு இவர்கள் இருவரும் அல்வா கொடுத்துவிட்டு தப்பித்துச் சென்றுவிடுவார்கள்.

படத்தில் சாப்ளின் தோன்றும் முதல் காட்சியே நம்மை நகைச்சுவையில் ஆழ்த்துகிறது. தெருவொன்றில் அவர் வந்துகொண்டிருக்கிறார். அப்போது ஓர் இடத்தில் மாடியிலிருந்து குப்பையைத் தரையில் யாரோ கொட்ட இவர் அருகே கொஞ்சமாக விழும்.

பின்னர் இவர் சற்று ஒதுங்க மேலேயிருந்து கொட்டப்படும் கூடையின் ஒட்டுமொத்த குப்பையும் இவர்மீது விழாமல் சற்றுத் தள்ளி விழ, இன்னொரு இடத்தில் இவர் மீதே மொத்தக் குப்பையும் விழ, அந்த இடத்தில் சாப்ளின் தன்னையே கோணங்கியாக்கிக்கொண்டு செய்யும் நகைச்சுவைகள் உன்னதம்.

அப்போது மேலே மாடி ஜன்னலையும் கீழே குப்பைத்தொட்டியும் மாறிமாறிப் பார்ப்பார். இதுமாதிரி இடங்களில் இவரது உடல்மொழி நடிப்பு அருமை. அருகில் உள்ள தரையில் திடீரெனக் குழந்தையைக் கண்டவர் சட்டென மாடியைப் பார்க்கிறார். அந்தக் காட்சியில் குழந்தையை யாரோ மாடியிலிருந்து போட்டுவிட்டதுபோல மாடியைப் பார்க்கும் அவரது நடிப்பு பிரதிபலிக்கும்.

இவரிடம் கிடைத்த குழந்தை சின்னஞ் சிறுவனாக வளர்கிறான்.

ஒருநாள் தெருப்படிக் கட்டில் உட்கார்ந் திருக்கிறான். அப்போது இவனுடைய உண்மையான தாய் வருகிறாள். உண்மையில் இருவருக்கும் தாய்மகன் என்ற உறவுகள் தெரியாது. இவனுடைய தாய் தன் குழந்தையின் ஏக்கத்தில் பொம்மைகளை வாங்கி வீதியில் காணும் குழந்தைகளுக்கெல்லாம் கொடுப்பாள்.

அந்த வகையில்தான் இவனுக்கும் ஒரு பொம்மையைப் பரிசளித்துவிட்டுச் செல்கிறாள். அந்த பொம்மையை ஒரு வளர்ந்த போக்கிரி ஒருவன் பறித்துக்கொண்டு ஓட அவனைத் துரத்திச் சென்று சண்டையிட்டு அவனை வீழ்த்துவான்.

சின்னஞ்சிறு உருவம்கொண்ட சிறுவன் இளவயது போக்கிரியை அடித்து துவம்சம் செய்வதும் இந்தப் போக்கிரி சிறுவனைவிட மிகப்பெரிய உடல்வாகு கொண்ட அவனுடைய அண்ணனை நோஞ்சான் போன்ற சாப்ளின் தந்திரமாக வீழ்த்துவதும் கொப்பளிக்கும் நகைச்சுவை சிதறல்கள்.

பொலிஸ்காரர் வந்து குழந்தையை ஆதரவற்றோர் இல்லத்திற்கு கொண்டுசெல்ல முற்படுவார். குழந்தையைக் கொடுக்க விருப்பமில்லாதிருக்கிறார் சாப்ளின். அதனால் பொலிஸோடும் அதிகாரிகளோடும் சண்டையிட்டு ஓட்டுவீடுகள் மீது துரத்தி வந்த பொலிஸ்காரரிடமிருந்து தப்பிக்கிறார். இக்காட்சிகள் அனைத்தும் நகைச்சுவையை அடிப்படையாகக் கொண்டுதான் ரசிக்கும்படியாக அமைக்கப்பட்டுள்ளன.



குழந்தை பிரிந்து சென்றுவிட தான் தங்கியிருக்கும் அறைப் படிக்கட்டின் கீழே தெரு வாசல்படியில் அமர்ந்து கனவு காணும் காட்சிகள் மிகமிக அருமை. இந்தப் படத்தில் இடம்பெறும் அத்தனை பாத்திரங்களும் சாப்ளின் கனவுகாணும் இந்தக்காட்சியில் சிறகுகளோடு வருவார்கள். ஆனால் சாப்ளின் மட்டுமே வானில் பறந்துசெல்ல பொலிஸ்காரர் சாப்ளினை சுட்டுவீழ்த்திவிடுகிறார். தொப்பென்று கீழேவிழுந்துவிட பொலிஸ்காரர் வந்து சாப்ளினை உலுக்குவார்.

பொலிஸ்காரர் வந்து உலுக்குவது கனவில் அல்ல என்பதும் உண்மைதான் என்பதை உணரும் சாப்ளின் மட்டுமல்ல நாமும் விழிபிதுங்குகிறோம்.



படம் முழுவதும் நகைச்சுவைக் காட்சிகளுக்குப் பஞ்சமில்லை.. படத்தின் ஆரம்பத்தில் ஒரு கார்டு "ஒரு திரைப்படம் சிரிப்போடு, கொஞ்சம் கண்ணீரோடும்" என்று வருகிறது. சிரித்துசிரித்து கண்ணீர் வரும், இச்சிரிப்புக்குப் பின்னால் உள்ள சோகங்களை சிந்தித்தால் கண்ணீர்வரும் என்றுகூட இதை எடுத்துக்கொள்ளலாம்.

படத்தின் துவக்கத்திலேயே ஒரு சாரிட்டி மருத்துவமனை காட்டப்படும். ஓர் இளம்தாய் குழந்தையோடு வெளியே வரக் காத்திருக்கிறாள். அவளுக்காக கிராதிகேட் திறந்துவிடப்படுகிறது. அவள் வெளியேறிய பிறகு மறுபடியும் கேட் மூடப்படுகிறது.

"பாவத்தில் பிறந்த குழந்தை" என்ற பொருளில் மருத்துவமனையின் வாயில்காக்கும் பெண் உடன் பணியாற்றும் ஒருவரிடம் கூறி சற்றே நக்கலாக சிரித்தபடியே கேட்டுக்கு பூட்டுபோடுவாள். அதிலிருந்தே அக்குழந்தை நம் இதயத்தில் பச்சக் என்று உட்கார்ந்துகொள்கிறது.

'சாரிட்டி' என்ற மருத்துவமனையிலிருந்த வெளியே வரும் தாய் குழந்தையை முதலில் ஒரு காரின் பின்இருக்கையில் வைத்துவிட்டுச் சென்றுவிடுகிறாள். அச்சமயம் திருடர்கள் வந்து காரை திருடி எடுத்துச் சென்றுவிடுவர்.

பின்னர் அந்த இளம்தாய் ஒரு பூங்காவில் அமர்ந்து மனம் திருந்தி குழந்தையை மீண்டும் காரிலிருந்து எடுத்துக்கொள்ள ஓடிவருகிறாள். ஆனால், அங்கு குழந்தையையும் காரையும் காணமுடியவில்லை. அவள் தவிக்கிறாள்.

அதேநேரத்தில் அந்தப் பெண், குழந்தை பெற காரணமான ஓவியன் தன் வீட்டில் ஓவியம் வரைந்து கொண்டிருக்கிறான். அவள் நினைவாக அவளுடைய புகைப்படத்தை எடுத்துப் பார்க்க முயல அப்புகைப்படம் கனப்படுப்பில் விழுந்து தீயில் கருகும் இடங்களும் நம் இதயத்தை அசைத்துப் பார்க்கின்றன.




ஆரம்பத்தில் இவர்களைத் துரத்தும்

(22 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் கார்த்திக் சொல்லும் அதிர்ச்சித் தகவல்



கார்த்தி தனது முகநூல் பக்கத்தில் முக்கிய பதிவு ஒன்றைப் பகிர்ந்துள்ளார். அதில் குழந்தைகள் பாதுகாப்புக் குறித்து பெற்றோர்களுக்குச் சின்ன விழிப்புணர்ச்சியைக் கொடுத்துள்ளார். குழந்தைகளை தொழில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு எனப்படும் உடல்முறை செயற்பாடுகள் குறித்த வகுப்புக்களில் சேர்க்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும், எனினும் அவசியமான நேரங்களைத் தவிர மற்றைய நேரங்களில் இது போன்ற வகுப்புக்களில் குழந்தைகளைச் சேர்க்க வேண்டாம் என்றும் அறிவுரை கூறியுள்ளார்.

அப்படியே சேர்த்தாலும் உங்களது பார்வையில் அல்லது சிசிடிவி கமராக்கள் மூலம் பார்க்கும் படியான வகுப்புக்களாகப் பார்த்துச் சேர்க்கவும். நான் இது போன்ற வகுப்புக்கள் குறித்து அதிர்ச்சிகரமான தகவல்களைக் கேள்விப்பட்டேன். இது போன்ற வகுப்புக்களில் குழந்தைகளை நடத்தும் முறை சரியாக இருக்காது. மேலும் குழந்தைகளை உங்கள் கண் பார்வையிலேயே வைத்திருங்கள் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.



## ஒன்பது குழி சம்பத்

தமிழ் சினிமாவில் மதுரை, சென்னை, திருநெல்வேலி என்று மாவட்டங்களின் பின்னனியில் வெளிவந்துள்ள திரைப்படங்கள் நிறைய உள்ளன. ஆனால் திருச்சி மாவட்ட கதைக்களத்தை மையமாக வைத்து வெளிவந்துள்ள திரைப்படங்கள் மிக சொற்பமே. அந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் திருச்சி மாவட்ட, மரபுகளை அந்த மண்ணின் மொழியை,கலாசாரத்தை மையமாகக் கொண்டு உருவாக்கியுள்ள படம் தான் ஒன்பது குழி சம்ப[த்] நீண்ட இடைவெளிக்குப் பிறகு காவிரி பாயும் திருச்சி மண்ணின் கதைக்களம் என்பதால் பார்வையாளர்களை நிச்சயம் வசீகரிக்கும் என்கிறார் ஒன்பது குழி சம்பத்தின் நடிகர் பாலாஜி.



## கமலின் மகளாக ஸ்ருதிஹாசன்

கமல்ஹாசன் உலக அளவில் அறியப்படும் சிறந்த நடிகராக இருக்கிறார். உலக நாயகன் என்று புகழப்படும் கமலின் மகள் ஸ்ருதிஹாசனும் குறுகிய காலத்திலேயே இந்திய பட உலகின் முக்கிய நடிகையாக உயர்ந்து இருக்கிறார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்களில் நடித்து வரும் ஸ்ருதிஹாசனை கடந்த சில வருடங்களாகவே அப்பா கமலுடன் இணைந்து நடிப்பீர்களா? என்று பத்திரிகையாளர்கள் கேட்டு வருகின்றனர். அதற்கு அவர், அப்பா மிகப் பெரிய நடிகர். அவருடன் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது சந்தர்ப்பம் வரும்போது பார்த்துக். கொள்ளலாம் என்று கூறினார்.

வீட்டில் இருக்கும் போது அப்பாவுடன் நடிப்பு ஒத்திகை பார்த்திருக்கிறேன். நடனம் கூட இணைந்து ஆடி இருக்கிறேன். அவருடன் நடிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. அந்த சந்தர்ப்பம் அமைந்தால் நடிப்பேன் என்று கூறி வந்தார். இப்போ[து] அந்த வாய்ப்பு அமைந்துள்ளது. கமல் நடிக்கும் புதி[ய] படத்தை மலையாள இயக்குநர் சஞ்சீவ்குமார் இயக்குகிறார். இந்த படத்தில் ஸ்ருதிஹாசனும் நடிக்கிறார். இதில் கமல் மகளாகவே ஸ்ருதிஹாசன் நடிக்கிறார் என்று தகவல் வெளியாகி உள்ளது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிம்பு எங்கே... ?

பீப்பாடல் பிரச்சினை பலூனாக இருந்த போது சென்னை வாசம்,பெரிய பிரச்சினை ஆன போது பொங்களூருக்குச் சென்றார் சிம்பு.அங்கே நகரத்துக்கு வெளியே உள்ள நண்பரின் பண்ணை வீட்டில் தஞ்சம்.

நீதிமன்றில் இருந்து விடுதலை பெற்று இப்போது சென்னையில் தங்கி இருக்கிறார்.சினிமாத் தொடர்பே சற்றும் இல்லாத நண்பர்கள் 5 பேர் தானாம் இப்போது சிம்புவின் உலகம். ராஜா, ராணி, ஜோக்கர் விளையாட்டு, மடிக்கணனியைத் திறந்து வைத்துக் கொண்டு கேம்ஸ் இடையில் அவ்வப்போது இணைய சற்றிங் எனப் பொழுதைக் கழிக்கிறார்.



# கன்னடத்துக்கு போகும் வேதாளம்

அஜித் நடிப்பில் வீரம் சிவா இயக்கத்தில் தீபாவளிக்கு வெளியான படம் வேதாளம். ஸ்ருதிஹாசன்,லட்சுமிமேனன், சூரி,தம்பி ராமையா நடித்த இந்தப் படத்துக்கு இசை அனிருத். வணிக ரீதியில் மிகவும் வெற்றிபெற்ற இந்தப் படம் தற்போது கன்னட சினிமாவையும் அலங்கரிக்க இருக்கிறது.

கன்னட சூப்பர் ஸ்டார் புனித் ராஜ்குமார் நடிகராக நடிக்க இருக்கிறார். நடிகைக்காக முன்னணி நடிகை ஒருவரிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.மேலும் தமிழில் வேதாளம் படத்தை தயாரித்த எம்.ஏ. ரத்னம் கன்னடத்திலும் தயாரிக்க இருக்கிறார்.

நந்தா கிஷோர் படத்தை இயக்க இருக்கிறார். படத்துக்கு இசை மற்றும் மற்ற தொழினுட்பக் கலைஞர்கள் குறித்த தகவல்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வாலி , வரலாறு படங்களுக்குப் பிறகு அஜித் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தி நடித்த படம் வேதாளம்.புனித் ராஜ்குமார் அஜித் கொடுத்த நடிப்பைக் கொடுப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.




# சசிக்குமாரின் அடுத்த படம்

இயக்குநராகி சினிமாப் பயணத்தைத் தொடங்கிய சசிக்குமார், இயக்கத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு பிரபல நடிகர்கள் வரிசையில் இடம்பிடித்து வருகிறார்.அவர் பாலா இயக்கத்தில் நாயகனாக நடித்து பொங்கலுக்கு வெளியாக இருக்கும் படம் தாரை தப்பட்டை.

இந்த நிலையில் இயக்குநர் வசந்தமணி இயக்கத்தில் சசிக்குமார் நடிகராக நடித்து வந்த வெற்றிவேல் படத்தின் படப்பிடிப்பு தஞ்சாவூரில் நிறைவடைந்தது.இதை சசிக்குமார் தன்னுடைய டுவிற்றரில் புகைப்படத்துடன் உறுதி செய்துள்ளார். இந்தப் படத்தில் சசிக்குமாருடன் மியாஜார்ஜ், பிரபு,சமுத்திரக்கனி, தம்பிராமையா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

டி.இமான் இசையமைக்கும் இந்தப் படத்தின் அடுத்த கட்ட வேலைகள் தொடங்கி விட்டதாம்.விரைவில் பட முன்னோட்டம், மற்றும் படக் கட்டவுட்டுக்கள் என்பன வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் வந்தால் என்ன செய்யலாம்!

- ம.செந்தமிழன்

காய்ச்சலும் சளியும் பரவலாக உருவாகும் சூழல் இது. நவீன மருந்துகள் இல்லாமல் இச்சூழலைக் கடக்க விரும்புவோருக்கானது இது.

காய்ச்சலுக்கும் சளிக்கும் எந்த மருந்தும் தேவையில்லை என்பது முதல் செய்தி. ஏன் தேவையில்லை என்பதைச் சற்று கவனமாக அறிந்துகொள்ளுங்கள்.

இப்போது மழை பெய்து நிலம் குளிர்ந்து கிடக்கிறது. மழை நின்று, வெயில் அடித்தாக வேண்டும் என்ற தேவை உருவாகியுள்ளது. ஏன் வெயில் தேவை என்றால், வெப்பம் உருவானால்தான், நிலத்தின் குளிர்ச்சி குறைந்து இயல்பான சூழல் ஏற்படும். மிதமான வெப்பம் தான் இந்த நிலப் பகுதியின் இயல்பான பருவநிலை. மிகையாகக் குளிர்ந்த நிலம் தனது இயல்பான மிதவெப்பத்தை இழந்துவிட்டது எனப் பொருள்.

அதிகமான வெப்பம்தான் குளிரைப் போக்கி, நிலத்தின் இயல்பு நிலையை மீட்டெடுக்கும். ஆகவே, வெயில் வந்து நிலத்தின் பருவநிலையைச் சீர்செய்கிறது.

'அண்டமும் பிண்டமும் ஒன்றுதான் எனும் ஆசான் திருமூலர் வாக்கினை நினைவில் கொள்ளுங்கள்.

மழை மற்றும் குளிர் காலங்களில் உடலின் இயல்பான வெப்பம் குறைகிறது. இந்த நிலையில் உடலில் குறைந்த வெப்பத்தில் பெருகும் நுண்ணுயிரிகள் அதிகரிக்கின்றன. இந்த நுண்ணுயிரிகள் கிருமிகள் என அழைக்கப்படுபவை. பருவநிலை மாற்றத்திற்கேற்ப நுண்ணுயிரிகளின் வகைகளும் எண்ணிக்கையும் மாறிக்கொண்டு தானிருக்கும். நிலத்திலும் இதுதான் நிகழ்கிறது. நிலம் ஈரமாக இருக்கும்போது நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகும். உடலிலும் இதேநிலைதான் உருவாகிறது. வெப்பம் குறைந்த உடலில், பலவகை நுண்ணுயிரிகள் பெருகி வளரும்.

இந்த நுண்ணுயிரிகள் எங்கிருந்து வந்தன எனக் கேட்டால், அவை எல்லாம் உடலின் உள்ளே இருந்தவைதான். வளர்ந்து பெருகுவதற்கான சூழல் இல்லாததால் இதுவரை அவை எல்லாம் உறங்குநிலையில் இருந்தன. சூழல் மாறியதும் அவற்றின் வளர்ச்சியும் பெருக்கமும் அதிகரிகிறது. மேலும் ஒரு தகவல் என்னவெனில், இந்த நுண்ணுயிரிகள் யாவும் உடலின் இயக்கத்திற்குத் தேவையற்ற கழிவுகளில்தான் வளரும் தன்மை கொண்டவை. நீண்ட காலமாகத் தேங்கி இருக்கும் மலம், செரிக்காத உணவு, சிறுநீர், சளி போன்ற கழிவுகளில்தான் கிருமிகள் எனப்படும் நுண்ணுயிரிகள் வளரும்.

கழிவுத் தேக்கம் இல்லாதவர்களின் உடலில் எந்தப் பருவநிலை மாற்றமும் காய்ச்சலை, சளியை ஏற்படுத்துவதில்லை. ஆக, உடலின் பருவநிலை குளிர்ந்ததும் உடலின் கழிவுகளில் வளரும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காத அளவு உயர்கிறது. இந்த உயர்வை உடனடியாகக் குறைக்க வேண்டியது உடலின் தேவையாக மாறுகிறது:



அவ்வாறு குறைக்காமல் போனால், இந்தக் கழிவு உயிரிகள் மேலும் மேலும் பெருகி உடலின் ஆற்றலைச் சிதைக்கும், விளைவாக, பல உறுப்புகள் செயலிழப்பும் நேரலாம். இந்தத் தேவையின் அடிப்படையில்தான் காய்ச்சல் வருகிறது.

உடலின் கழிவுகளையும் அவற்றில் பெருகி வளரும் நுண்ணுயிரிகளையும் கட்டுப்படுத்தவும் வெளியேற்றவும்தான் காய்ச்சல் வருகிறது. வெப்பநிலையை உயர்த்தி, கழிவு உயிரிகள் வளருவதற்கான சூழலைக் கெடுத்து, அவற்றை வெளியேற்றும் உடலின் செயல்பாடுதான் காய்ச்சல். நிச்சயமாக, காய்ச்சல் என்பது நோய் அல்ல. உடலின் உள்ளே இருக்கும் நோயின் வெளிப்பாடுதான் காய்ச்சல். ஆகவே காய்ச்சலைக் கண்டு அஞ்சாதீர்கள். அது உங்கள் உடலைப் பராமரிக்கவே வந்துள்ளது.

உடலின் கழிவு உயிரிகள் வெளியேற்றுவதற்கு எவ்வளவு வெப்பம் தேவையோ அந்தளவு வெப்பம் உருவாகும். இந்த வெப்பத்தை அனுமதிக்க வேண்டும். இதுதான் நலமாக வாழ்வதற்கான எளிய வழி. ஆம், காய்ச்சல் வெப்பத்தைக் குறைக்க நீங்கள் செய்யும் எந்த நடவடிக்கையும் உடலின் பணியில் குறுக்கிடுவதுதான்.

சிலவகை மாத்திரைகளை விழுங்கியதும் உடல் வியர்க்கிறது என மகிழ்ச்சி அடைகிறீர்கள். அது காய்ச்சலுக்கான தீர்வு அல்ல. மாறாக, உடலின் வெப்பத்தைக் குறைத்து கழிவு நுண்ணுயிரிகளின் வளர்ச்சிக்கு உகந்த வெப்ப நிலையை அந்த மாத்திரைகள் உருவாக்கிவிடுகின்றன. இவற்றோடு இணைத்துத் தரப்படும் உயிர்க்கொல்லி மருந்துகளும் (ஆண்டி பயாடிக்) வேறுவகை நுண்ணுயிரிகள்தான். இவை உடலில் பெருகி, உடலின் உள்ளே இருக்கும் உயிரிகளை அழிக்க வேண்டும் என்பது நவீன மருத்துவத்தின் அணுகுமுறை. ஆனால், உயிர்க் கொல்லி மருந்துகளின் வழியாக உடலுக்கு உள்ளே அனுப்பப்படும் நுண்ணுயிரிகள் உடலுக்குப் புதிய சுமைகளாகத் தான் மாறுகின்றன.

இவற்றின் வளர்ச்சியையும், இவற்றின் வருகையால் உடலுக்குள் உருவாகும் நுண்ணுயிர்ப் பெருக்கத்தின் மாற்றங்களையும் கையாள முடியாமல்தான் நவீன சமூகம் தள்ளாடிக் கொண்டுள்ளது.

இதனால்தான், காய்ச்சலுக்கு உடனடியாக ஆண்டிபயாடிக் கொடுக்காதீர்கள்' என தமிழக அரசின் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

உடலின் உள்ளே இருக்கும் தேவையற்ற நுண்ணுயிரிகளை உடலின் வெப்பநிலை வெளியேற்றும் உன்னத செயல்தான் காய்ச்சல். இதில் நாம் தலையிட்டு தவறு செய்யும்போது, அந்த நுண்ணுயிரிகள் உடலில் தங்கி நீண்டகால நோய்களை வரவழைக்கின்றன.

***காய்ச்சல் வந்ததும் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.***

1. காய்ச்சல்காரர் முழுமையாக ஓய்வெடுக்க வேண்டும்.

2. தாகம் எடுத்தால், வெந்நீரை ஆறவைத்தோ, வெதுவெதுப்பாகவோ பருக வேண்டும். தாகம் இல்லாமல் ஒரு சொட்டு நீர் கூட பருக வேண்டாம்.

3. காய்ச்சல் துவக்கநிலையில் இருக்கையில், பசிக்கும்போது, அரிசிக் கஞ்சி, இட்லி, இடியப்பம் ஆகியவற்றை உட்கொள்ளலாம். இட்லி இடியப்பத்திற்கு சர்க்கரை தொட்டுக் கொண்டால் நல்லது. குழம்பு, சட்னிகளைத் தவிர்க்க வேண்டும்.

4. காய்ச்சல் உயர்ந்து பின்னர் இறங்கும். அந்த நிலையில் பசிக்கும்போது, இரசம் ஊற்றி சோற்றை நன்கு கரைத்து உட்கொள்ளலாம். இரசத்தில் புளிக்குப் பதில் தக்காளி சேர்ப்பது நல்லது. இதற்கு பருப்புத் துவையல், புதினா, கறிவேப்பிலை, கொத்தமல்லி துவையல் வகைகள் தொட்டுக்கொள்ளலாம்.

5. காய்ச்சலின் அளவு மிகவும் அதிகமானால், குளிர்ந்த நீரில் துணியை நனைத்து நெற்றியில் ஒத்தடம் தரவேண்டும். உடல் குளிரும் அளவுக்கு ஒத்தடம் தரக் கூடாது. அதிக வெப்பம் குறையும் அளவு தந்தால் போதும்.

6. காய்ச்சல் இருக்கும்போது, பசிக்காமல் சாப்பிடுவது மிகமோசமான விளைவுகளை உருவாக்கும். மேலும் தாகம் இல்லாமல் தண்ணீர் பருகுவதும் நல்லதல்ல. எக்காரணம் கொண்டும் உடலின் தேவையைப் புரிந்துகொள்ளாமல் உணவை நாடாதீர்கள்.

7. மேற்கண்ட உணவுகள் தவிர வேறு எந்தவகை உணவையும் பானத்தையும் தவிர்ப்பது சிறந்தது. குறிப்பாக, பால் பொருட்களை நிறுத்திவிடுவது மிக முக்கியம்.

8. நிலவேம்பு போன்ற கசாயங்களைப் பருகும் வழக்கம் இப்போது அதிகரித்துள்ளது. முறையான மருத்துவ ஆலோசனை இல்லாமல் நிலவேம்பு போன்ற மருந்துகளைப் பருகுவது நல்லதல்ல.

இவை தவிர காய்ச்சல், சளி ஆகிய தொல்லைகளின்போது உடலுக்கு உதவி செய்யும் சில உணவு மருந்துகளைக் கீழே இணைத்துள்ளேன். இவை செம்மை நலமையங்களில் கற்றுத்தரப்படுபவை.

**சளி வெளியேற்றத்திற்கு உதவி செய்யும் உணவு மருந்துகள்:**

***மிளகு கசாயம்***

சீரகம் - 1 தேக்கரண்டி

மிளகு - 7 எண்ணிக்கை

இவ்விரண்டையும் தனித்தனியாக வறுத்து எடுக்கவும். பின்னர் சட்டியில் இவற்றை ஒன்றாகக் கொட்டி, நான்கு தேக்கரண்டிகள் பனை வெல்லத் தூளைத் தூவ வேண்டும். வெல்லத் தூள் பாகுபோல் உருகும். இப்பாகு சட்டியில் ஒட்டாமல் கிளற வேண்டும். பின்னர், ஒன்றரை தம்ளர் தண்ணீர் ஊற்றி நன்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழவர் திருநாள்

உழவருக் கொருநாள் திருநாள்
உழைப்பவர் அறுவடை பெறும்நாள்
உலகினில் முதல்முதல் திருநாள்
உணவினைத் தருபவர் பெருநாள்
(உழவரு)

தழல்தனில் பழையன விடும் நாள்
தையினை மார்கழி தொடும் நாள்
பழையன கழித்திட வரும் நாள்
பழையன போ(க்)கித் தரும் நாள்
(உழவரு)

பகலவன் இறைஎன தொழும் நாள்
பகுத்தறிவு வாதியும் தொழும் நாள்
சகலரும் இணைந்திடும் திரு நாள்
தமிழரின் தமிழ்த்தை முதல்நாள்
(உழவரு)

எருதையும் துதித்திடும் ஒருநாள்
ஏரையும் வணங்கிடும் ஒருநாள்
வரும் தை பொங்கல் மறு நாள்
மாட்டுப் பொங்கல் திருநாள்
(உழவரு)

# கவிதைப்புனல்

## தை பொங்கலோ பொங்கல்





உழைப்பின் பலன் பொங்க
உள்ளத்துள் உவகை பொங்க
உலையில் பால் பொங்க
உதிப்பதுதான் தைப்பொங்கல்.
ஆனால்...
திசைதோறும் தீவிரவாதம்
திளைத்துப்பொங்கி
தெருவெங்கும் குண்டுகள்
வெடித்துப் பொங்கி
வஞ்சமும் லஞ்சமும்
வழிந்து பொங்கி
வலம் வரும் நாளில்...
வக்கற்ற மக்களுக்கு
வாழ்வில் ஏது
வளத்தின் பொங்கல்?

கிரிஜா



காலப் பாதையின்
மற்றொரு மைல்கல்.
காலக் கரும்பின்
மற்றொரு கணு.
காலச் செடியின்
மற்றொரு மலர்.

கடந்ததை உருவாக்கி
நிகழ்வதைக் கருவாக்கிப்
புதியதை உருவாக்கப்
புத்தாண்டு அழைக்கிறது!

நமது சுவடுகளைப்
பதிவுசெய்யக்
காத்திருக்கிறது நம் இல்லம்.
மானுட நேசத்தால்
மணக்கட்டும் என்றும்
வாழ்க்கைச் சோலை!

தஞ்சை தாமு



# பணத்தைச் சேமிப்பது எப்படி?

இன்றைய அவசர உலகில் பலரும் பணம் பணம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் சிலர் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைத்த பின்பும் அதனைச் சரியான முறையில் செலவு செய்யத் தெரியாமையால் பணக்கஷ்டத்துக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட்டு சரியான முறையில் செலவு செய்தோமானால் நமது பணமும் சேமிப்பாகும் வாழ்வும் சிறக்கும் . அவ்வாறு திட்டமிட்டுச் செய்யக் கூடிய சில வழிமுறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. படித்துப் பாருங்கள்.

## உணவு

- ♦ சமைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ♦ வீட்டுத் தோட்டம் ஒன்று வையுங்கள்.
- ♦ வெளியில் உணவு உண்ணுவதைத் தவிருங்கள்.
- ♦ வேலைக்கு வீட்டிலிருந்து உணவு எடுத்துச் செல்லுங்கள்.
- ♦ சோடா மற்றும் குளிர்பானத்தைத் தவிர்த்து தண்ணீரை அருந்துங்கள். அது உடலுக்கும் நல்லது.
- ♦ அருகாமையில் காடு இருந்தால் அங்கு சென்று பழங்கள், காளான் போன்றவற்றை பெறக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ♦ அருகாமையில் காடு இருந்தால் அங்கு சென்று விலங்குகளை வேட்டையாடக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ♦ மீன் பிடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ♦ சொட்டுத் தீனி, சிறப்பு உணவுகளை அளவோடு உண்ணுங்கள்.
- ♦ மதுபானங்களைத் தவிருங்கள் அல்லது குறையுங்கள்.
- ♦ மரக்கறி உணவுக்கு மாறிவிடுங்கள். இறைச்சி, கடலுணவுகள் பொதுவாக விலை கூடியவை.
- ♦ சுற்றுலா செல்வதானால் உணவையும் நீரையும் நீங்களே எடுத்துச் செல்லுங்கள்.
- ♦ தேவைக்கு அதிகமாகச் சமைக்காதீர்கள். உணவை வீணாக்காதீர்கள், கொட்டாதீர்கள்.
- ♦ சத்துள்ள தரமான உணவாக வாங்குங்கள்.
- ♦ போத்தல் தண்ணீர் வாங்குவதை நிறுத்துங்கள். தேவைப்படின் தண்ணீரைச் சுடவைத்து அல்லது வடிகட்டிக் குடியுங்கள்.
- ♦ பருவத்தில் விளையும் உணவுகளை வாங்குங்கள். அவை விலை மலிவாக இருக்கும்.
- ♦ உள்ளூர் உணவுகளை வாங்குங்கள்.
- ♦ உழவர் சந்தையில் பொருள்களை வாங்குங்கள்.

## உடை

- ♦ தைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ♦ தரமான ஒரு தொகுதி உடைகளை வாங்குங்கள், நீண்டகாலம் பயன்படுத்துங்கள்.
- ♦ புதிய உடைகளை அடிக்கடி வாங்காதீர்கள்.
- ♦ ஒரு நாள் அல்லது ஒரு பயன்பாட்டு உடைகளை வாங்காமல், வாடகைக்கு அல்லது இரவல் எடுக்க முடியுமா என்று பாருங்கள்.
- ♦ உறவினர்கள் பயன்படுத்திய உடைகளை மீள் பயன்படுத்துங்கள்.
- ♦ பயன்படுத்தப்பட்ட உடைகளை வாங்குங்கள்.

## கல்வி

- ♦ உங்கள் கல்விக்கு இணையத்தைப் பயன்படுத்துங்கள்.
- ♦ நண்பர்களிடம், அல்லது திறன் பண்டமாற்று வலைத்தளங்கள் ஊடாக கல்வியைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## நலம்

- ♦ புகைப்பிடிப்பதை நிறுத்துங்கள்.
- ♦ அதிகமாக மதுபானம் அருந்துவதை நிறுத்துங்கள்.
- ♦ உடற்பயிற்சி செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- ♦ சத்துணவு பற்றி அறிந்து அதை உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- ♦ உடற்பயிற்சி நிலையத்துக்கு கட்டணம் செலுத்தாமல், பூங்கா சென்று ஓடுங்கள், நடவுங்கள், விளையாடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் பல வகையான நீரோட்டங்கள் உண்டு. இந்த நீரோட்டங்கள் தான் உலக வானிலை மாற்றங்களை நிர்ணயிக்கும் என்ற புதிய செய்தி கடந்த ஆண்டுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கடலில் இருவேறு நீரோட்டங்கள் வருவது இயற்கையான ஒன்று. அவைகள் வெப்ப நீரோட்டங்கள் மற்றும் குளிர் நீரோட்டகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்நீரோட்டங்கள் கடல் மேற்பரப்புகளில் குறுகியகால மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

பலத்த காற்றின் காரணமாக வெப்ப கடல் பகுதிகளிலிருந்து நீரானது குளிர் கடல் பகுதிக்கும், குளிர் கடல் பகுதியில் உள்ள நீரானது வெப்பப் பகுதிகளுக்கும் செல்லும் போது இருபகுதிகளிலும் வெப்ப மாற்றம் ஏற்படும்.

பசிபிக் கடலில் ஏற்படும் வெப்ப மாறுதல்கள் உலகளாவிய வானிலை மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன. கடல் நீரோட்டங்களில் மாற்றம் ஏற்படும் போது அந்த பகுதிகளில் உள்ள நாடுகளில் புயல்களும், வெள்ளங்களும் மற்றும் பஞ்சங்களும் ஏற்படுகின்றன.

உலகின் சாதகமான சூழலை எல் நினோ உருவாக்கும் எனும் கருத்து இதனால் மாறிவிட்டது. எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பதை உலகின் பல நிகழ்வுகள் தற்போது விஞ்ஞானிகளுக்கு உணர்த்தியுள்ளன.

இதனால், இயற்கைப் பேரழிவுகளுக்கு எல் நினோவும், லா நினோவும் முக்கிய காரணமாக இருக்கலாம் என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன.





# பாதிப்பை ஏற்படுத்தும் கடல் நீரோட்டங்கள்!

கடல் நீரின் வெப்ப நிலை சில டிகிரி அதிகரிக்கும் அல்லது குறையும். இந்த இயற்கை மாறுதல்கள் கடல் பகுதிகளில் அடிக்கடி நிகழும்.

இந்த வெப்ப நீரோட்டங்களை எல் நினோ (El Nino) என்றும் குளிர் நீரோட்டங்களை லா நினோ (La Nino) என்றும் அழைக்கின்றனர். தமிழக கடலோர மாவட்டங்களில் பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டதற்கு எல் நினோ தான் காரணம் என பல வெளிநாட்டு பருவநிலை மாற்ற ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எல் நினோ ஏற்படுத்தியுள்ள பருவநிலை மாற்றங்களால் தென்னிந்தியாவில் வழக்கத்திற்கு மாறாக வரும் பெப்ரவரி மாதம் வரை மழை தொடரக்கூடும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

எல் நினோவானது எப்போது வரும் என்று யூகிக்க முடியாத சூழலில் 2 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது பல முறையோ வரலாம். வந்த பின் 12 முதல் 18 மாதம் வரை நீரோட்டமானது அப்பகுதியில் காணப்படும். இவை அப்பகுதிகளில் கடல் வெப்ப நிலைகளிலும், கடல்வாழ் உயிரினங்களிலும், கடல் நீரின் தன்மைகளிலும் மாற்றங்களை உருவாக்கும்.

இதன் விளைவாக, உலக வானிலையில் இருவேறு பெரிய விபரீதங்களாக அதிக வெள்ளத்தை அல்லது அதிக வறண்ட சூழலை உருவாக்கும். வறண்ட நாடுகளில் அதிக் மழையையும், மழை இல்லா காலங்களில் அதிக மழையை ஒரே இடத்தில் பெய்ய செய்வதும் இவற்றின் விளைவாகும்.

இதன் பின்னர் பல நாடுகளில் எல் நினோ, லா நினோ குறித்த ஆராய்ச்சி அதிகரித்துள்ளது. பசிபிக் பெருங்கடலில் பல இடங்களில் கடல் தன்மைகளின் மாற்றங்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ள பல மிதவை கருவிகளை நிறுவி, கடற்மேற்பரப்பு வெப்ப நிலை மாற்றங்களைக் கண்காணித்து இந்த ஆண்டு எல் நினோ வருமா, வராதா என்று எதிர்வு கூறிவிடுவிடுகிறார்கள்.

கடற்கரை மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட வெப்ப கடல் நீரோட்டங்கள் எல் நினோவை சின்னப்பையன், கடவுள் பிள்ளை என்றும், லா நினோ என்ற குளிர் நீரோட்டமானது மீனவர்களால் சின்னப்பெண் என்றும் அழைக்கப்படுகிறது.

வானிலையிலும் கடல் சூழலிலும் அசாதாரணமாண மாற்றங்களை ஏற்படுத்தும் எல் நினோ மற்றும் லா நினோ உலக மக்களை பல கோணங்களில் பாதிப்படையச் செய்கின்றன. வெப்ப நீரோட்டமானது கடல் நீரில் ஊட்டச் சத்துக்களைக் குறைக்கின்றன.

> **கடற்கரை மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட வெப்ப கடல் நீரோட்டங்கள் எல் நினோவை சின்னப்பையன், கடவுள் பிள்ளை என்றும், லா நினோ என்ற குளிர் நீரோட்டமானது மீனவர்களால் சின்னப்பெண் என்றும் அழைக்கப்படுகிறது.**

வெப்பம் அதிகரிக்கும் போது திமிங்கலம், சுறா, டால்பின் போன்ற பெரிய மீன்கள் இடம் மாறிச் செல்லும், நிலைக்கொள்ளாமல் இவற்றில் பல மடிந்து கரை ஒதுங்குகின்றன. இடம் மாறி செல்ல முடியாமல் இதில் தங்கி விடும் மீன்கள் உடல்குறைபாடுகளோடு இனப்பெருக்கம் செய்ய முடியாமல் காணப்படும்.

*1982-83* மற்றும் *1997-98*இல் ஏற்பட்ட எல் நினோ தான் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தியதாக கருதப்படுகிறது. அதன் வருகையால் பல நாடுகளில் கொசுக்களினால் வரும் நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது.

மலேரியா, டெங்கு, மூளைக் காய்ச்சல், ரிஃப்ட் வால்லி காய்ச்சல் (Rift Valley Fever) போன்ற கொசுக்களினால் வரும் நோய்கள் எல் நினோ மற்றும் லா நினோவின் தாக்கங்களாக அறிவிக்கப்பட்டுள் ளன.

தற்போதைய பசிபிக் கடல் பகுதிகளில் ஏற்பட்டுள்ள எல் நினோ விளைவுகளால் தென்னிந்தியா, மத்திய இந்தியா, கம்போடியா, தெற்கு பிலிப்பைன்ஸ், மத்திய வடகிழக்கு, தாய்லாந்து போன்ற பகுதிகளில் எல் நினோ விளைவு கடுமையாகத் தொடரும் அபாயம் உள்ளது என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

எரிமலையோ, பூகம்பமோ, சுனாமியோ மட்டும்தான் இயற்கை சீற்றம் என்று கிடையாது. மக்களை பெருமளவு பாதிக்கும் சூழ்நிலை மாற்றங்களும் இயற்கைப் பேரழிவுதான் என்கிறார் கனடாவைச் சேர்ந்த வானிலை நிபுணர் ஜிம் நியுமேன்.

எதுவானாலும், மேலும் ஓர் இயற்கை அச்சுறுத்தல் உலக மக்களுக்கு வந்துள்ளது வருந்தத்தக்கது.

**- எஸ். பிரகாஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பில் சிறந்து விளங்குபவர் யார்?

நம் எல்லோருடைய வாழ்விலும் நட்பு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. நம் சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ள மட்டுமல்ல, நம் சந்தோஷங்களை பல மடங்கு அதிகரிக்கவும், துன்பங்களை முற்றிலும் குறைக்கவும் நமக்கு எப்போதுமே ஒரு நட்பு தேவைப்படுகிறது.

இருவருக்குமிடையில் ஒரு நல்ல அந்நியோன்யம் உருவாகுமிடத்தில் நல்லதொரு நட்பு ஆரம்பமாகிவிடும். நல்ல நட்புக்கு வயது ஒரு தடை கிடையாது. ஆண்-பெண் பாகுபாடும் இல்லை. அதேபோல், ஆண் நட்பை விட பெண் நட்போ அல்லது பெண் நட்பை விட ஆண் நட்போ சிறந்தது என்று சொல்லிவிட முடியாது. ஆனாலும், ஒரு பெண்ணுடன் வைத்துக் கொள்ளும் நட்பை விட, ஒரு ஆணுடன் வைத்துக் கொள்ளும் நட்பு வித்தியாசமானது. ஏன் மிகவும் விசேஷமானது என்று கூடச் சொல்லலாம். நீங்கள் ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம். ஆனால், நீங்கள் ஆண்களின் நட்பையே பெரிதும் விரும்புவீர்கள் என்பதை உணர்ந்துள்ளீர்களா? ஆண்கள் தான் தங்கள் நட்புக்காக எதையும் செய்வார்கள் என்பதும் உண்மை தான். ஆண் நட்பே ஒரு தனி விசேஷம் தான் என்பதற்கான காரணங்கள் சில உள்ளன. அவற்றை நீங்களும் அறிந்துகொள்ளுங்கள்

***அநாவசியமாக தொந்தரவு செய்ய மாட்டார்கள்***

ஆண் நட்புக்கு அழகே இதுதான். உங்கள் மனதில் உள்ளவற்றை நீங்களாகவே கூறும் வரை அநாவசியமாக உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்.

***அந்த நிமிடத்தில் வாழ்வார்கள்***

ஆண் நட்புக்கு தேவையில்லாத விடயங்கள் என்று கிடையாது. நண்பனின்/நண்பியின் பிறந்தநாளை மறந்து விட்டோமே என்று மூலையில் இருந்து அழமாட்டார்கள். இதுபோன்ற அற்பத் தனமான சின்ன விஷயங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, சந்தோஷமாக இருப்பார்கள். நண்பர்களையும் சந்தோஷப்படுத்துவார்கள்.

***உங்கள் மதிப்பு தெரியும்***

உங்கள் ஆண் நண்பர்களுக்கு உங்கள் குழந்தைகளின் பெயரோ, உங்களுக்கு என்ன உணவு பிடிக்கும் என்பதோ அல்லது உங்கள் சொந்த விஷயங்களோ ஒரு பொருட்டல்ல. உங்களுடன் உணர்வுபூர்வமாக இருப்பது தான் அவர்களுக்கு முக்கியம்!

***எப்போதுமே உங்கள் பக்கம்***

ஆண் நட்பில் பொறாமை என்ற வார்த்தைக்கே இடம் கிடையாது. அவர்கள் நட்பு உண்மையானால், உங்களுடைய அனைத்து முடிவுகளிலும் உங்களுக்கு ஆதரவாகவே இருப்பார்கள்.

***நாடகம் ஆடுவதில்லை***

பெண் நண்பர்கள் போல் ஆண் நண்பர்களுக்கு நாடகம் ஆடத் தெரியாது. தங்கள் மனதில் எதையும் போட்டு மூடி மறைக்க மாட்டார்கள். எதற்கும் தயங்காமல் பட்பட்டென்று வெளிப்படையாகப் பேசிவிடுவார்கள்.

***சக நட்புக்கு மரியாதை***

சக நட்புக்கு மரியாதை அளிப்பதில் ஆண்களுக்கு நிகர் ஆண்களே! இதன்மூலம் ஆயுளுக்கும் அவர்கள் உங்களுக்கு நண்பர்களாகவே இருப்பார்கள்.

**குறைந்த பேச்சு, நிறைய செயல்**

ஆண் நண்பர்கள் வளவள என்று அதிகம் பேசுவதில்லை. அதற்குப் பதில், காரியத்தைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பார்கள்.

***உங்களை மதிப்பிட மாட்டார்கள்***

ஆண் நட்பின் முக்கிய அம்சமே இதுதான். நீங்கள் நீங்களாகவே இருக்கலாம். நீங்கள் என்ன பேசுகிறீர்கள், செய்கிறீர்கள் என்று அலசி ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

நன்றி - வாலிபம்.கொம்

## மரணம் தின்ற நட்பு...

நான் பார்த்திருந்தபொழுதே
காணாமல் போனதென் பாதைகள்..
மரணம் என்பது
உறவுகளைத் தானே
பிரிக்கும்..
உணர்வுகளை அது
என்ன செய்யும்..
ஒரே கோட்டில் பயணித்த
இரு புள்ளிகள்
துண்டாடப்பட்ட துயரில்
துவழ்கிறது மனம்..
உன் வார்த்தைகள்
காதுகளில் ரீங்காரமாக...
நான் எண்ணாத விசயங்களை
இலகுவாக உரைப்பதிலும்
பணிகளை முடிப்பதிலும்
வியந்துபோன நாள்கள்
இப்போதும் விஸ்வரூபமாக..
பாசம் அன்பு நேசம் கடந்து
நட்பென்ற நாண்
நீண்டு கிடந்ததை
அறுத்தவர் யார் என்று
இங்கு நான் -விம்மலுடன்
விசாரணை நடாத்துகிறேன்..

*அம்பலவாணன்*

## நட்புப் பொன்மொழிகள்

- நட்பு என்பது நமது ஆரோக்கியம் போன்றது. அதை இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்வோம்.
- புத்தகங்கள்தான் நம்முடன் பேசும் மௌன நண்பர்கள்.
- எந்த ஒரு காயத்துக்கும் நண்பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்துக்கு மருந்தே இல்லை.
- உன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடு. ஆனால் ஒரு போதும் நண்பனை மட்டும் விட்டுக் கொடுத்து விடாதே.
- வாழ வைப்பவன் இறைவன், வாழத் தெரிந்தவன் மனிதன், விழ வைப்பவன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்.
- உரிமை கொண்டாடும் உறவை விட, உறவைக் கொண்டாடும் நட்பே சிறந்தது.
- உன் நண்பர்களைக் காட்டு.. உன்னைப் பற்றிச் சொல்கிறேன்.
- பெருமைக்காக கடவுளை இழப்பான், பொறாமைக்காக நண்பனை இழப்பான், கோபக்காரன் தன்னையே இழப்பான்.
- நமது நண்பர்கள் தான் நமது உண்மையான சொத்துக்கள்.
- வேறு எதுவும் கிடைக்காவிட்டாலும் நீ எங்கிருந்தாலும் உன் நண்பன் உன்னை அடைவான்.
- ஒவ்வொரு நண்பர்களும் புதிய உலகத்தின் வாயிற்கதவுகள்.
- சிறந்த நண்பர்களாக நிறைய நாள்கள் பிடிக்கும்.
- உன்னைப் பற்றி முழுதாக அறிந்திருந்தும் உன்னை விரும்புபவனே உன் நண்பன்.
- ஒரு சில சமயம் உன் நண்பர்களை நீ தேர்ந்தெடுக்கிறாய். சில சமயங்களில் அவர்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- நமது வாழ்க்கையில் பலர் கடந்து செல்கின்றனர். ஆனால் நண்பர்கள்தான் அழியாத சுவடுகளை ஏற்படுத்திவிடுகின்றனர்.
- புதியவர்கள்தான் நண்பர்களாகின்றனர். ஆனால் அந்தக் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.
- புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். பழைய நண்பர்களையும் தொடர்பில் வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு படைக்குமா பதினாறு?

- வேல்தர்மா

**2016** ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரத்திற்கு சவால் மிக்க ஆண்டாக அமையும். பன்னாட்டு நாணய நிதியம் 2016 ஆம் ஆண்டு 3.5 வீதம் வளரும் என எதிர்பார்க்கின்றது. இது 2008 ஆம் ஆண்டுக்கு முன்னரான பத்தாண்டுகால சராசரி வளர்ச்சியான 4.5 வீதத்தை ஒப்பிடுகையில் குறைவானதே. ஐக்கிய அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் பொருளாதாரங்கள் உள் நாட்டுக் கொள்வனவால் தாக்குப் பிடிக்கின்றன. ஆனாலும் அவற்றின் வளர்ச்சிகள் 2016இல் போதுமானதாக இருக்காது. ஐரோப்பிய ஒன்றியம் தனது பொருளாதாரத்தை நிலை நிறுத்த தொடர்ந்தும் பல ஊக்குவிப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியிருக்கும். ஐரோப்பாவினதும் வட அமெரிக்காவினதும் பொருளாதாரங்களுக்கு ஏற்றுமதித் துறையில் இருந்து தூண்டுதல்கள் போதிய அளவு கிடைக்காத அளவிற்கு வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி போதியதாக இருக்காது. எரிபொருள் உற்பத்தி நாடுகளுக்கான ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடையும். எரிபொருள் உற்பத்தி நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தில் தங்கியிருக்கும் பொருளாதாரங்களும் 2016ஆம் ஆண்டு பாதிக்கப்படும். உலக நாடுகளிடையே ஏற்றுமதிக்கான போட்டிகள் தீவிரமடையும். நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு தமது நாணயங்களின் பெறுமதியைக் குறைக்க முயலும். உள் நாட்டு வேலைவாய்ப்புக்களை வளர்க்க சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, பிரேசில், ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும். உலகெங்கும் பகுதி நேர வேலை செய்பவர்களின் தொகை அதிகரிக்கும். அரசியல் கட்சிகள் மக்களிடம் தங்கள் செல்வாக்கை உயர்த்துவதற்காகக் கடைப்பிடிக்கும் பரப்பியற் கொள்கைகள் உலகெங்கும் முனைப்புப் பெறும்.




### ஐக்கிய அமெரிக்காவின் வட்டியும் முதற் குட்டியும்

அமெரிக்க மைய வங்கி 2016 ஆம் ஆண்டு நான்கு தடவைகள் தனது வட்டி விழுக்காட்டை உயர்த்தும் என Goldman Sachs Group Inc இன் பொருளியல் நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றார்கள். உலக விலைவாசி உயர்வு அந்த அளவிற்கு அதிகமாக இருக்கும் என்கின்றனர் அவர்கள். ஆனால் HSBC. 2015இறுதியில் சீனப் பொருளாதாரம் தொடர்பான சாதகமற்ற புள்ளி விபரங்களும் எரிபொருள் விலை தொடர்ந்து சரிவதும் HSBC Holdings.Plc இன் பொருளியல் நிபுணர்களின் வாதத்திற்கு வலுச் சேர்த்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவர் 2016 நவம்பரில் தெரிவு செய்யப் படுவாரா?

### சீனா அடங்காது அடக்கி வாசிக்கும்

தென் சீனக் கடலிலும் கிழக்குச் சீனக் கடலிலும் சீனா 2016 ஆம் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான நகர்வுகளைச் செய்யும். எந்த வித விட்டுக்கொடுப்புக்களையும் அது செய்யாது. ஆனால் ஒரு போர் உருவாகுவதை அது எப்போதும் தவிர்த்துக் கொண்டே இருக்கும். கிழக்குச் சீனக் கடலில் புதிதாகத் தீவுகள் எதையும் சீனா உருவாக் காது என எதிர்பார்க்கலாம். ஆனால் ஏற்கனவே உருவாக்கிய தீவுகளில் தனது கட்டுமானப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். ஏற்றுமதியிலும் முதலீட்டிலும் தங்கி இருக்கும் சீனப் பொருளாதாரத்தை உள் நாட்டுக் கொள்வனவை நோக்கி நகர்த்தும் சீனாவின் முயற்சி 2016இல் தீவிரப்படுத்தப்படும். சீனா ஆட்சியாளர்கள் பொருளாதாரத்தின் மீதான தமது கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்தப் பட்ட அளவில் மட்டுமே தளர்த்துவார்கள். சந்தைப் பொருளாதாரமாகச் சீனப் பொருளாதாரத்தை மாற்றும் முயற்சி மந்த கதியிலேயே நடக்கும். ஆனாலும் பொதுவுடமைக் கட்சியினர் நாட்டின் மீதான தமது கட்டுப்பாட்டைத் தளர்த்த மாட்டார்கள். சீனா தனது நாணயத்தின் பெறுமதியை 2016இலும் தேய்மானம் அடைய அனுமதிக்கும்.

### நேட்டோ விரிவாக்கம்

2016ஆம் ஆண்டு மொண்டிநிக்ரோ நேட்டோவில் இணைக்கப்படலாம். 1500தரைப்படையினரும், 350கடற்படையினரும், 230 விமானப் படையினரும் உள்ள சின்னஞ்சிறிய நாடு நேட்டோவில் இணைவது நேட்டோவிற்கும் ரஷ்சியாவிற்கும் இடையிலான படைத்துறைச் சமநிலையைப் பெரிதும் பாதிக்காவிட்டாலும் ரஷ்சிய அதிபர் புட்டினை ஆத்திரப்படவைக்கும் ஒரு நிகழ்வாக 2016இல் அமையப் போகின்றது. அடுத்த நேட்டோ உச்சி மாநாடு போலாந்துத் தலைநகர் வார்சோவில் ஜூலை மாதம் 8ஆம் 9ஆம் திகதிகளில் நடக்கவிருக்கின்றது. உக்ரேனில் ரஷ்யா செய்த தலையீட்டைத் தொடர்ந்து சுவீடன், சுவிற்சலாந்து, பின்லாந்து, ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் ரஷ்யாவிடமிருந்து பாதுகாப்பதற்கு நேட்டோவில் இணையவேண்டும் என்ற கருத்து வலுவடைகின்றது. ஆனாலும் ஒரு வல்லரசுப் போட்டிக்குள் தாம் சிக்கிக் கொள்ளக் கூடாது என ரஷ்யாவிற்கு அண்மையாக இருக்கும் இந்த நாடுகள் கருதுகின்றன். சேர்பியா நாடு நேட்டோவில் இணைவதற்குத் தயக்கம் காட்டுகின்றது.



### வளர்முக நாடுகள்

வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை ஒரு புறம் அதிகரிக் கும் அமெரிக்க டொலரின் பெறுமதி இறக்குமதிக்குக் கொடுக்க வேண்டிய விலையை அதிகரித்துக் கொண்டிருக்க மறுபுறம் குறையும் சீன நாணயப் பெறுமதி ஏற்றுமதியில் நெருக் கடியை கொடுக்கும். பிரேசில், துருக்கி, நைஜீரியா ஆகிய நாடு களில் பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்கும். மத்திய அமெரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் பொருளாதாரப் பிரச்சனைகள் மோசமடைந்து அரசியற் குழப்பங்களாக மாறும்.

### எரிபொருள் உற்பத்தி நாடுகள்

2016 ஆம் ஆண்டு எரிபொருள் உற்பத்தி நாடுகளுக்கு மிக்வும் சோதனை மிகுந்த ஆண்டாக அமையும். மேற்காசியாவில் உள்ள எரிபொருள் உற்பத்தி நாடுகள் தமது அந்நியச் செலவாணிக் கையிருப்பு கரைந்து போவதைக் கண்ணீர் மல்கப் பார்க்க வேண்டிய நிலை உருவாகும். ரஷ்யா, வெனிசுலா போன்ற நாடுகள் பல நெருக்கடிகளைச் சந்திக்கும். அமெரிக்காவில் பல எரிபொருள் உற்பத்தி நிறுவனங்கள் நிதி நெருக்கடியால் மூடப்படும். சவுதி அரேபியா போன்ற செல்வந்த நாடுகள் தமது தேசிய வருமானத்தை வேறு முனைப்படுத்த முயற்சி செய்யும்.

### ஐரோப்பிய ஒன்றியம்

அகதிகள் வருகையும் அரச செலவில் சிக்கன நடவடிக்கையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அரசியற் பிரச்சினை களைத் தீவிரப்படுத்தும். விளடிமீர் புட்டீனின் ரஷ்ய விரிவாக்கக் கொள்கை பாதுகாப்புப் பிரச்சினையை மோசமாக்கும். சீனாவிற்கான ஏற்றுமதி வீழ்ச்சியும் வளரமுடியாமல் தவிக்கும் வளர்முக நாடுகளின் பொருளாதாரமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் பொருளாதார நெருக்கடியையும் மோசமாக்கும். அவ்வப்போது சிறு தீவிரவாதத் தாக்குதல்கள் சில நாடுகளில்

( 22 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**13.01.2016 – 19.01.2016**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

நீண்ட நாள் முயற்சி கூட இனிதே நிறைவேறும். பண வரவு பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணிபுரிந்து, நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் மேம்படும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். வாகனத்தின் பயன்பாட்டால் இனிமை காண்பீர்கள். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். புத்திரரை வழி நடத்துவதில் மென்மையான அணுகுமுறை தேவை. ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனையை ஏற்பதால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் கடமை உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

ஆரோக்கியம் மேம்படும். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் உண்டாகும். எதிரியால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணியை விரைந்து முடிப்பர். பெண்கள் பணம், நகை பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். பசு, பால் பாக்ய யோகத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். புத்திரர்கள் உங்களுடன் கருத்து வேறுபாடு கொள்ள வாய்ப்புண்டு. கடன் பிரச்சினை ஏற்படலாம். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சோம்பலைக் கைவிடுவது அவசியம். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் உங்களின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பர். வழக்கு விஷயத்தில் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. கணவன், மனைவி ஒற்றுமையுடன் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை உடனடியாக சரி செய்யவும்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

மனதில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலும், செயலிலும் நிதானம் வெளிப்படும். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்பு தேவை. புத்திரரின் எதிர்கால வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். மனைவியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் திறமையை வளர்த்துக் கொள்வர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரர்களின் வளர்ச்சி கண்டு பெருமை உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நல்ல எண்ணத்திற்கு குறை வராமல் பாதுகாக்கவும். அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நண்பரோடு சேர்ந்து படிப்பர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். புத்திரர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியுடன் இருந்த மோதல் போக்கு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

### மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

மகளின் ஜாதக யோக பலனால் நன்மை ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை செய்வது நல்லது. உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழிலில் புதிய உத்தி மூலம் வருமானத்தைப் பெருக்குவீர்கள். பணியாளர் கடமையை உணர்ந்து சிறப்பாக பணிபுரிவர். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

இடையூறு செய்தவர் விலகிப் போகும் சூழல் உருவாகும். சுப விஷயத்தில் இருந்த தடை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். மனைவியிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்பாடுநன்மைக்கு வழிவகுக்கும். ஆரோக்கிய விஷயத்தில் அக்கறை உண்டாகும். மனைவியின் ஆலோசனையை பரிசீலிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 119

● அடேல் பாலசிங்கம்



பின்னே தங்கியிருந்தவர்கள் எப்படி நடப்பார்கள் என்று ஊகிக்க முடியாத, குரூரப் போக்குடைய இந்தியப் படைகளால் தாம் கொல்லப்படலாம் அல்லது காயப்படுத்தப்படலாம் என்று தெரிந்தே இருந்தார்கள். இத்தகைய பகைமைச் சூழலில் காயமடைந்த விடுதலைப் புலிப் போராளிகளை யாழ்ப்பாண தீபகற்பத்தின் வடமராட்சியிலும் சாவகச்சேரியிலும் உள்ள உள்ளூர் மருத்துவமனைகளுக்கு மாற்ற வேண்டியது தவிர்க்க முடியா ததாயிற்று. வசதிகள் குறைந்த இந்தச் சிறிய மருத்துவமனைகளில் விடுதலைப்புலிப் போராளிகளையும் ,பெருந் தொகையாக காயம் அடைந்து கொண்டிருக்கும் பொது மக்களையும் வைத்துப் பராமரிப்பது கடினமாகியது.

வீடுவாசல்களை இழந்த பெருந்தொகை மக்கள் வடமராட்சியில் உள்ள வல்வெட்டித்துறையில் உள்ள தங்கள் உறவினர்களு டனும் நண்பர்களுடனும் தங்கியிருக்க வந்தார்கள். வல் வெட்டித்துறையைச் சேர்ந்த சில புலிப் போராளிகள் தங்கள் கூட்டாளிகளையும் தம்மோடு கூட்டி வந்திருந்தார்கள். இந்தத் தேசிய நெருக்கடிக்கு மக்கள் தயக்கமின்றி முகம் கொடுத்தார்கள். தங்கள் மண் பற்றையும் பெருந்துணிச்சலையும் வெளிக்காட்டி னார்கள். பல குடும்பங்கள் காயமடைந்த புலிப் போராளிகளுக்கு இருப்பிடமும் தஞ்சமும் அளித்தார்கள். அவர்களில் ஒருவர் கிட்டுவின் தாயார். கிட்டு அம்மா என்று வாஞ்சையோடு அழைக்கப்படுபவர்.தமிழ் ஈழத்தை பற்றுறுதியோடு ஆதரிப்பவர். போராட்டத்தின் தேவைகளுக்காக தமது வீட்டையும் இதயத் தையும் முழுமனதாக திறந்து விட்டிருந்தார். நீண்ட காலமாக விடுதலைப்புலிப் போராளிகளை ஆதரித்து பராமரித்த வரலாறு அவருடையது. யாழ்ப்பாண மருத்துவ பீட மைதானத்தில் இந்தியப் படையினர் இறங்கும் போது போராளிகள் பதுங்கித் தாக்குதல் நடத்திய வேளை அதில் காயமடைந்த மூத்த தளபதி பொட்டு அம்மானை பத்திரமாக வைத்திருக்கக் கூடிய மிகப் பாதுகாப்பான இடம் கிட்டு அம்மாவின் வீடே என்று முடிவு செய்யப்பட்டது. இந்தத் தாக்குதலின் போது காயமடைந்த முதற் புலிப் போராளி பொட்டு அம்மானே ஆவார். உடனடியாக இவரை யாழ்ப்பாணம் அரச மருத்துவமனைக்கு விரைவாகக் கொண்டு போயிருக்கிறார்கள். வயிற்றில் ஏற்பட்ட கடுங்காயத்தால் உயிர் போகும் நிலையில் இருந்த இவரைக் காப்பாற்ற அவசர அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. சிறிது சுகம் காணப்பட்டதும் வல்வெட்டித்துறையிலுள்ள கிட்டு அம்மாவின் பாதுகாப்பான வீட்டுக்கு அவர் கொண்டு போகப்பட்டார். அங்கே அவரோடும் வேறும் இரண்டு மூத்த போராளிகள் தரித்திருந்தார்கள். பொட்டு அம்மானுக்கு வேறு காயங்களும் இருந்தன. தானியங்கி துப்பாக்கி சூடு தைத்து முழங்கையின் முட்புரித்தசைநார்கள் கிழிந்து போயிருந்தன. மிகக் கவனமான பராமரிப்பும்,இடையறா மருந்து கட்டலும் தேவைப்பட்டது. காலிலும் பாதத்திலும் கூட, சிறு காயங்கள் அதாவது அவர் படுகாயம் அடைந்திருந்தார்.

### கொடூரமான படுகொலைகள்

பொட்டு அம்மானும் வேறு புலிப் போராளிகளும் கிட்டுவின் வீட்டில் இருப்பதை அறிந்தோம். எமது வீட்டிலிருந்து சில நூறு யார் தூரத்தில் அந்த வீடு இருந்தது. சுகம் விசாரிக்க அங்கே போனோம். வீடு தற்காலிக மருத்துவமனையாக மாற்றப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர்கள் பேச்சை மீறினால்...



செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக் கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஒரு ஆட்டுக்குட்டி, உனக்கு என்னவேண்டும்? என்று கேட்டது.

ஓநாய், நண்பா... இங்கே இளசான புல் கிடைக்கும் போலிருக்கிறது. இளம்புல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்கவில்லை... என்று வருத்தத்துடன் கூறியது.

அப்படியா? நீ புல்லையாச் சாப்பிடுவாயா? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே...? என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

சேச்சே... அதெலாம் சுத்தப் பொய். நான் சைவம் என்றது ஓநாய்.

அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, இந்த வேலியைக் கடந்து இந்தப் புல்வெளிக்குள்ளே வருவதற்கான வழியைக் காட்டுகிறேன் என்றபடி அருகிலிருந்த வேலி இடைவெளியின் வழியாக வெளியே வந்தது.

உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

குழந்தைகளாக இருப்பவர்கள் பெரியவர்கள் சொன்னதை நினைவில் கொண்டு, அதன்படி என்றும் நடக்க வேண்டும், இல்லையேல் ஆபத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

- கணேஷ் அரவிந்த்.



# சிறுவர் உலகம்


## வட்டமாக மிக வேகமாக சுற்றுபவன் திடீரென நின்றால் தலைசுற்றி மயக்கம் வருவது ஏன்?

வட்டமாக மிக வேகமாக சுற்றுபவன் தீடிரென நின்றால் பொதுவாக தலைசுற்றி மயக்கம் ஏற்படுவதற்குக் காரணம் சமச்சீரைக் கட்டுப்படுத்தும் காதின் உட்பகுதியிலுள்ள உணர்ச்சி நீர்மம் உடல் சுற்றுவது நிண்ட பிறகும் தொடர்ந்து சுற்றிக்கொண்டுள்ளது.

ஆகையால் சுற்றுப்புறப் பொருள்கள் இன்னும் சுற்றிக் கொண்டிருப்பதாக அல்லது ஓடிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றன. ஆயினும் சில விநாடிகளுக்குள் அந்த நீர்மம் நெகிழ் பொருள் சமன் அடைந்து சரியாகி விடுகின்றது. இது உணர்ச்சிக் கிளுகிளுப்பு எனவும் அழைக்கப்படும்.

உயரத்திலிருந்து கொண்டு கீழே பார்ப்பவர்களுக்கும் கப்பலில் போகின்ற போது பார்ப்பவருக்கும் இக்கிறுகிறுப்பு ஏற்படக்கூடும். உட்காதின் நெகிழ் நீர்மத்தின் காரணத்தால் ஏற்பட்ட நரம்பின் விளைவே இது அல்லாமல் பெரும்பாலும் உடல் சார்ந்த தன்மை இதில் இல்லை எனக் கூறலாம். உடலின் எட்டாவது நரம்பின் ஒரு கிளையான வெஸ்டிபுல நரம்பின் பாதிப்பிலும் தலைசுற்றல் ஏற்படும்.

# வர்ணம் தீட்டுவோம்



இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



# பாப்பா பாப்பா




பாப்பா! நாளைய தலைமை நீயல்லவோ!
இன்றைய கடமைகளைச் செய்திடு! - பாப்பா!
பெற்றோர் பெரியோர் சொற்படி நடந்திடு! பாப்பா
பெரியவராய் நீயும் மாறும் காலம் வந்திடும் - பாப்பா

நல்ல நல்ல பேச்சுகள் நளினமாகப் பேசிடு - பாப்பா
நாளும் பொழுதும் நல்லதைச் செய்திடு! - பாப்பா
உனது வீட்டைச் சுற்றி அழுக்குகள் அகற்றிடு! - பாப்பா
சுகாதாரம் பேணிடில் நல்ல சுகமாய் வாழலாம்-பாப்பா

-மீலாத்

# சிறுவர் துணுக்குகள்



**செக்கிங் மாஸ்டர்:-** ரிக்கெட்டைத் தாங்கோ?

**பயணி** :- இந்தாங்கோ.

**செக்கிங்மாஸ்டர்:-**இது பழைய ரிக்கெற். புதிய ரிக்கெற்றைத் தாங்கோ.

**பயணி** :- இந்த ரயில் மட்டும் என்ன புதுசா ?

செக்கிங் மாஸ்டர்:- ................?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பழிக்கொரு வழி

மிருசுவில் தமிழ்தாசன்

நேரம் இரவு பத்து மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சின்னஞ் சிறிய வீதியால் ஏதோ ஒரு வாகனம் பேரிரச்சலைக் கிளப்பியபடி போய்க் கொண்டிருந்தது. சுகந்தன் மிகவும் பயந்து விட்டான்.

"டேய்டேய்!நீஒண்டுக்கும் பயப்பிடாதை! அது உவர் விநாசியற்றை மரு மோன்ரை கன்ரர். நீ பயப்புடாமலிரு. இந்தா! இதிலை பாணும் சம்பலும் கிடக்குது. சாப்பிடு முதலிலை" மணிவண்ணனிடமிருந்து பாண் துண்டை வேண்டா வெறுப்பாக வாங்கிய சுகந்தன் அதைச் சாப்பிட விரும்பாது எதையோ வெறித்துப் பார்த்தபடி ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

"மத்தியானம் என்னடா சாப்பிட்டனி? இஞ்சார் நான் சொல்லுறன். இனி அவங்கள் வரமாட்டாங்கள். நீ ஒண்டுக்கும் யோசிக்காமல் சாப்பிட்டிட்டுப் படு"

இப்போதைக்கு சுகந்தனின் ஒரே ஒரு நண்பன் இந்த மணிவண்னன் தான். மற்றைய நண்பர்கள் தான் அவனுக்கு இப்படியொரு துரோகத்தைச் செய்து அவனை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டார்களே! அடர்ந்த பற்றைகள் மட்டும் நிறைந்து வளர்ந்திருந்த அந்தப் பராமரிப்பற்ற காணிக்குள் காவிளாய், நெருஞ்சி, காஞ்சோண்டிச் செடிகளுகளுக்கு மத்தியில் ஒரு சிறிய இடத்தை மட்டும் சற்றுத் துப்பரவாக்கி தனது வாசஸ்தலமாக்கிக் கொண்டான் சுகந்தன். சுமார் ஒரு வாரமாக அவனுடைய பொழுது முழுவதும் இங்கேயே கழிந்து கொண்டிருக்கிறது. வீட்டிலிருந்து மனைவி சாப்பாடு கொண்டு வருவாள். அல்லது உயிர் நண்பன் கொண்டு வந்தாற் சரி. வேறு யாருமே அந்தப் பக்கம் வருவதில்லை. அவன் ஒளிந்திருக்கும் இந்த இடமும் தெரிந்திருக்கவில்லை.

டோகா நாட்டில் பணியாற்றிய காலங்களில் வாய்க்கு ருசியான உணவு, வசதியான நிம்மதியான உறக்கம், கலகலப்பான வாழ்க்கை என்று எப்படி எல்லாம் வாழ்ந்த சுகந்தன் இப்படியொரு அவமான நிலைக்காளாவான் என்று யார் தான் நினைத்திருந்தார்கள். விதியோ! சதியோ! எப்படியோ அவனுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமாகவே இருந்தது. இன்றைக்கோ நாளைக்கோ சரிந்து வீழ்ந்து உயிரை விடத் தயாராயிருக்கும் பல்லாண்டு காலப் பழமை வாய்ந்த ஆலமரம். அதனை அண்டி நீர் வற்றிப் போயிருந்த கேணி, அருகில் பாம்புப் புற்றுக்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயங்காட்டிக் கொண்டிருந்தன. ஒரு மகுடியையோ அல்லது புல்லாங் குழலையோ எடுத்து ஊதினால் எப்படியும் ஒரு பத்துப் பாம்புகளையாவது அங்கே பார்க்க முடியும். அவ்வாறான ஒரு பயங்கரச் சூழலில் தான் உயிரைக் கையில்பிடித்தபடி இரவு பகலாக நாள்களை ஓட்டுகின்றான். தனக்கு நேர்ந்த திட்டமிடப்பட்ட சதியையும் தன்னுடைய விதியையுமெண்ணி அடிக்கடி கண்ணீர் சிந்துவான். அதை விட அவனால் எதுவுமே செய்ய முடியவதில்லை. நடந்த துரோகங்கள், தான் பழிவாங்கப்பட்ட விதங்கள் அடிக்கடி அவன் நெஞ்சில் வந்து ஆயிரம் அம்புகளாகக் குத்தி நிக்கும். அன்றும் அந்தக் கசப்பான நினைவுகள் சங்கிலிக் கோர்வைகளாக வந்து நின்று அவனைக் கடந்த காலத்துக்கு அழைத்துச் சென்றன.

சுகந்தன் ஊரில் வாழ்ந்த காலங்களில் அவனுக்கு ஏராளமான நண்பர்களிருந்தார்கள். எல்லோருடனும் அன்பாகவும், அன்னியோன்னியமாகவும் பழகுவான். ஆனால் கட்டார் நாட்டுக்குப் போய் வந்த பின்பு நண்பர்களின் சேர்க்கையைக் குறைத்துக் கொண்டான் என்று கூறுவதை விடத் தவிர்த்துக் கொண்டான் என்று கூறுவதே பொருத்தம்.

கொட்டும் பனியிலும், வாட்டும் கொடிய வெயிலிலும் தன்னை அர்ப்பணித்து ஏதோ சம்பாதித்துக் கொண்டு வந்திருந்தான். இப்போது மனைவியுடனும் இரண்டு வயதுக் குழந்தையுடனுமே தனது வாழ்க்கையை முடக்கிக் கொண்டான். முன்னைய காலங்கள் போல நண்பர்களுடன் சுற்றித் திரிந்து அரட்டையடித்துப் பொழுது போக்குவதில்லை. மனைவியும் குழந்தையுமே தனது உலகமெனக் கருதி வாழ்ந்தான். இவனுடைய இந்த மாற்றம் சில நண்பர்களுக்கு ஏமாற்றத்தையும் ஒரு வித குரோத உணர்வினையுமுண்டாக்கியிருந்தது. அதன்



விளைவைத் தான் இப்போது காட்டிலும் மேட்டிலிமிருந்துகள்வனைப்போல் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

"சுகந்தன் வெளிநாட்டிலை உழைச்சுக் கொண்டு வந்தாப் போலை இப்ப பெரிய கெப்பர் காட்டுகிறார். எங்களோடை சேருறதுமில்லை. ஆள் பெரிய லெவல்" சூரியகுமாரின் இக்கூற்றினை நரேனும் சிவாவும் முழுமையாக ஆமோதித்தார்கள்.

"பொறு! சுகந்தன் பிள்ளையை நோகாமல் ஒரு வலையுக்கை விழுத்திக் காட்டுறன் பார்" பழியுணர்வுடன் கூறிய நரேனின் கைகளைப் பிடித்து உற்சாகப்படுத்தினான் சிவா.

அத்தோடு சும்மாயிருக்கவில்லை. சுகந்தனை ஏதாவதொரு படுகுழியில் தள்ளி அவனை முன்னைய நிலைக்குக் கொண்டு வந்து கஷ்டப்பட வைக்க வேண்டும். உடலியல் ரீதியாக எவ்வித தொல்லைகளும் கொடுக்காது நட்பு ரீதியில் பேசிப் பொறியில் வீழ்த்தி விட வேண்டும். திட்டத்தை கச்சிதமாகத் தீட்டினார்கள். கை மேல் பலனும் கிடைத்தது அவர்களுக்கு.

"சுகந்தன் நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. கையிலை கிடக்கிற காசைப் போட்டு வாகனத்தை வாங்கி லீசிங் போடு. மாதம் மாதம் உழைச்சு லீசிங்கைக் கட்டினால் கடைசியாய் வாகனம் மிஞ்சி உன்ரை முதலாகும் தானே! பயப்புடாதை. உப்பிடித்தான் உங்கை எல்லாரும் செய்யினம்" நண்பர்களின் ஆசைவார்த்தைகளில் மயங்கி விலை உயர்ந்த வான் ஒன்றை வாங்கினான். அவன் நினைத்தது போல அதை வைத்துச் சம்பாதிக்க முடியவில்லை.

மனைவியின் நகைகள் மாதாந்தக் கட்டுப்பணமாக மாறின.

முடிந்தளவு கடன்பட்டான். லீசிங் கட்டணம் கட்ட முடியவில்லை. வேறு வழி தெரியவில்லை. வாகனம் பறி முதலாகப்போகின்றது. என்ன செய்யலாம்! வாகனத்தையும் கொண்டு இந்தப் பற்றைக் காட்டிலே அன்னம் தண்ணீரின்றித் தலை மறைவாகி இந்த கேவலமான நிலைக்காளாகி விட்டான்.

பழிவாங்குவதில் பல வழிகளிருக்கின்றன. நேரடியாக விரோதத்தைக் காட்டியும் பழிகொள்ளலாம். நண்பனைப் போல நடித்து மறைமுகமாகவும் பழி வாங்கலாம். இவர்கள் கைக் கொண்டிருந்த வழியே பழி தீர்ப்பதற்கு சிறந்ததென இவர்கள் எண்ணி மகிழ்ந்தனர். அப்பாவி சுகந்தன் வலைக்குள் சிக்கிய மீனாகத் தினம் தினம் துடித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருக்குள் கலந்த.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்தான் பிற்காலத்தில் சாப்ளினை அந்தக் குழந்தையிடம் அழைத்துச் செல்லக்கூடியவராகவும் வருவது பார்வையாளனை சற்றே நெகிழச் செய்கிறது.

சாப்ளினிடம் இதுநாள் வரை வளர்ந்த குழந்தை ஒரு நாய்வண்டி போன்ற ஒன்றில் போட்டு இழுத்துச் செல்லப்படுவான். இந்தக் காட்சியில் அச்சிறுவன் சாப்ளினைப் பார்த்துக் கதறுவான். மேலும் நீதிமன்றத்தில் குழந்தையைத் தேடிவரும் தாயை வினோதமாக சிறுவன் பார்க்கையில் தாயின் கண்கள் அன்பில் விரிகிறபோது நம் கண்களையும் அவை ஈரப்படுத்திவிடுகின்றன.

இந்தப் படத்தில் ஆதரவற்ற குழந்தையாக நம்மை வாட்டியெடுக்கும் சிறுவனாக நடித்த ஜாக்கி கூகனும் கைவிடப்பட்ட அபலைப் பெண்ணாக வரும் எட்னா பர்வியான்ஸும் பார்வையாளர்களின் இதயத்திலிருந்து அவ்வளவு சீக்கிரம் அகலமாட்டார்கள்.

தனது அற்புத நடிப்பாற்றலால் மட்டுமல்ல எழுதி, இயக்கி, இசையமைத்து, தயாரித்து மௌனப்படத்தை இன்றுவரையிலும் பேசவைத்திருப்பவர் சார்லி சாப்ளின்தான். 1921இல் அவர் இயக்கிய முதல் படமும் இதுவே. 1921 இல் வந்திருந்த 'தி ஃபோர் ஹார்ஸ்மேன் ஆஃப் தி அப்போகாலிப்ஸ்' திரைப்படத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு மிகப்பெரிய வெற்றியைத் தந்தது இப்படம்.

மேலும் கலாச்சார, வரலாற்றிய, அழகியல்மிக்க நினைவுச்சின்னம் இது என அமெரிக்க காங்கிரஸ் கூறியதோடு இத்திரைப்படத்தின் படச்சுருள்களை அமெரிக்க அரசாங்கம் நிர்வகித்துவரும் தேசிய திரைப்பட பதிவுக்கழக லைப்ரரியிலும் பத்திரமாக பாதுகாத்தும் வைத்துள்ளனர்.

நகைச்சுவை என்பது யாரையும் புண்படுத்தாமல் ஒரு படி மேலே போய் சமூகம், வாழ்க்கை போன்ற பெரிய விஷயங்களுக்கு எளிய அர்த்தங்களைத் தர வேண்டும். அத்தகைய ஒரு சிறந்த திரைக்கதையின் வகைமாதிரி உதாரணமாய் 'தி கிட்' திகழ்ந்துகொண்டிருக்கிறது.

# காய்ச்சல்.....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொதிக்க வைக்கவும். சுண்டக் காய்ச்சிய பின்னர் அடுப்பை நிறுத்தி விட்டு, இந்த நீரில் பின்வரும் இலைகளைப் போட வேண்டும்:

1. துளசி
2. கற்பூர வல்லி (ஓம வல்லி)
3. வேப்பிலைக் கொழுந்து

இவ்விலைகளைப் போட்ட பின்னர் மூடி வைத்து வெதுவெதுப்பான சூட்டில் பருக வேண்டும். இந்த இலைகள் கிடைக்க வில்லையென்றால் பரவாயில்லை. காய்ச்சிய நீரைப் பருகலாம்.

*முறை:*

உறங்கச் செல்வதற்கு ஒருமணி நேரம் முன்பு பருகலாம். தொடர்ந்து ஐந்து நாட்கள் மட்டும்தான் பருக வேண்டும்.

**தூதுவளை வறுவல்**

தூதுவளை இலைகளை (நான்கு அல்லது ஐந்து) நெய்யில் வதக்கி, ஒரு பிடிச் சோறுடன் பிசைந்து உண்ண வேண்டும்.

*முறை:*

மாலை வேளையில் உண்ண வேண்டும். தொடர்ந்து ஐந்து நாட்கள் மட்டும்தான் உட்கொள்ள வேண்டும்.

**சீரகத் தண்ணீர்**

ஒரு சட்டித் தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து இறக்க வேண்டும். அதே சூட்டில், சிறிய தேக்கரண்டி சீரகம், ஏழு மிளகுகள் போட்டு மூடி வைத்து விட வேண்டும். வெதுவெதுப்பான பதத்தில் பருகலாம். ஒவ்வொரு முறை பருகும்போதும் சன்னமாகச் சூடேற்றிக் கொள்வது நல்ல பலன் தரும்.

சூழல் சரியாகும் வரை, வழக்கமான குடிநீருக்குப் பதில் சீரகநீரை மட்டுமே பருகுவது மிகுந்த நற்பலனைத் தருகிறது. செரிமானம் மேம்படவும், சளி வெளியேறவும், மூச்சுச் சிக்கல்களைச் சீர்செய்யவும் சீரக நீர் உதவியாக உள்ளது. காய்ச்சலில் இருப்போர், சீரக நீர் பருக வேண்டாம். வெந்நீரை ஆறவைத்து மட்டுமே பருக வேண்டும். சளித் தொல்லையில் இருப்போரும், காய்ச்சலுக்குப் பின்னும், செரிமானச் சிக்கல் உள்ளோரும் சீரக நீர் பருகலாம்.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு உங்கள் மற்றும் உங்கள் உற்றார் உடல்நலனை மேம்படுத்திக்கொள்ளுங்கள். உடலின் வெப்பநிலை மாற்றங்களை நோய் எனப் புரிந்துகொண்டு அஞ்சாதீர்கள். மிக முக்கியமாக, காய்ச்சல்களுக்கு வைக்கப்படும் பெயர்களின் மீது அக்கறை காட்டாதீர்கள்.

மருந்தில்லா வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் இலட்சக் கணக்கான மக்கள் காய்ச்சலைக் கண்டு கலங்காமல் வாழ்கிறார்கள். ஒருவகையில், காய்ச்சல் வந்தால் மகிழ்ச்சி அடையும் மனிதர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். உடலின் உள்ளே இருக்கும் கழிவு உயிரிகளை வெளியேற்றும் வெப்பத்தை வரவேற்பதுதானே உண்மையான அறிவியல்!

# வரலாறு படைக்குமா.....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கும். உள்நாட்டுப் பாதுகாப்பு பெரும் பிரச்சனையாக உருவெடுக்கும். பொருளாதார ரீதியில் இத்தாலியும் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சேர்க்கப்படவேண்டிய ஒரு நாடாக 2016இல் உருவாகும்.

**பிரித்தானியா**

பிரித்தானியாவின் அரசியலில் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா தொடர்ந்தும் இருப்பதா என்பது தொடர்பான விவாதம் சூடு பிடிக்கும். ஸ்கொட்லாந்து, வேல்ஸ் ஆகிய பிராந்திய நாடாளுமன்றங்களுக்கான தேர்தல் 2016இல் நடைபெறும். வீழ்ச்சியடையும் எரிபொருள் விலை ஸ்கொட் லாந்தின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு கிடைக்கும் ஆதரவைக் குறைக்கும். பிரித்தானிய அரசியலில் பொறிஸ் ஜோன்ஸனின் செல்வாக்கு அதிகரிக்கும். இலண்டன் மாநகர பிதாவிற்கான தேர்தலும் 2016இல் நடக்கவிருக்கின்றது. 2016ஆம் ஆண்டு வில்லியம் ஷேக்ஸ்பியரின் 400ஆவது நினைவு ஆண்டாகும்.

**கலக்கிய ஐ எஸ் கலங்கும் அசாத் நிலைப்பாா்**

2015 ஆம் ஆண்டில் உலகை கலக்கிய ஐ எஸ் என்றும் ஐ எஸ் ஐ எஸ் என்றும் ஐ எஸ் ஐ எல் என்றும் அழைக்கப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பு 2016இல் பல முனை எதிர்ப்புக்களால் கலக்கமடையவிருக்கின்றது. 2015ஆம் ஆண்டின் இறுதியிலேயே ஐ எஸ் அமைப்பிற்கு பல பிரச்சனைகள் ஆரம்பித்து விட்டன. அதன் நிதி மூலங்கள் பல அழிக்கப்படலாம். அதன் ஆதிக்க நிலப்பரப்பு சுருக்கப்படலாம். பல தலைவர்களை ஆளில்லாப் போர் விமானங்கள் வேட்டையாடலாம். துருக்கியும் ஐக்கிய அமெரிக்காவும் ஐ எஸ் அமைப்பிற்கு எதிராக நெருக்கமாக இணைந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். 2016-ம் ஆண்டிலும் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்தை அசைக்க முடியாது.

**இணையவெளிப் படைக்கலப் போட்டி**

2016இல் பல நாடுகளிடையே இணையவெளிப் போர் முறைமை தொடர்பாகப் போட்டிகள் அதிகரிக்கும். ஒரு நாட்டின் கணனித் தொகுதிகளை ஊடுருவி அவற்றைச் செயலிழக்கச் செய்வது இணையவெளிப் போர் எனப்படும். இணையவெளியில் ஊடுருவித் தாக்குதல்களுக்கும் அப்படிப்பட்ட தாக்குதல்களுக்கும் எதிரான செலவுகளை பல நாடுகள் 2016இல் அதிகரிக்கும்.

**ரஷ்யா**

ரஷ்யா தனது உலக ஆதிக்கத்தை மீள் நிலை நிறுத்தும் முயற்சியை 2016இலும் தொடரும். ஆனால் மேலும் பல பொருளாதாரப் பின்னடைவுகளை ரஷ்யா 2016 இல் சந்திக்க வேண்டி வரும். இது பல உள்நாட்டுக் குழப்பங்களை ரஷ்யாவில் தோற்றுவிக்கும். வேலை நிறுத்தங்கள் பல நடக்கலாம். அவற்றிற்கு எதிராக புட்டீன் பல அடக்குமுறைகளை அவிழ்த்துவிட நிர்ப்பந்திக்கப்படுவார். இது தற்போது உச்சத்தில் இருக்கும் அவரது செல்வாக்கைப் பாதிக்கும். உக்ரேனில் ரஷ்யா சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து ஒரு உடன்பாட்டுக்கு வரும்.

**இந்தியா நகரும்**

உலக நாடுகள் பலவும் தமது பொருளாதாரங்களை வளர்ச்சிப் பாதையில் நகர்த்த முடியாமல் தவிக்கும் போது இந்தியா தனது பொருளாதா ரத்தை வளர்ச்சிப் பாதையில் நகர்த்தும். அதை ஓடச் செய்வதற்கு ஊழல் ஒழிப்பும் சிவப்பு நாடா அறுப்பும் செய்வது இந்தியாவில் இலகுவான காரியங்களல்ல.

**போக்கை மாற்றும் அமெரிக்கா**

மற்ற நாட்டு விவகாரங்களிலும் பிராந்தியப் பிரச்சினைகளிலும் தனது மூக்கை அவசரப்பட்டு மூக்கை நுழைக்கும் போக்கை 2016இல் மாற்றிக் கொள்ளும். மாறாக அதனது நட்பு ஆட்சியாளர்கள் தாமாகப் பிராந்தியப் பிரச்சினையைக் கையாளத் தூண்டுதலும் உதவிகளும் செய்யும். இதன் மூலம் தனது பாதுகாப்புச் செலவீனக் குறைப்பைச் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

**வல்லாதிக்கப் போட்டி**

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் சீனாவையும் ரஷ்யாவையும் வேறு வேறு விதமாகக் கையாளும். சீனாவிற்கு பொருளாதார விட்டுக் கொடுப்புக்களைச் செய்து பிராந்திய ஆதிக்க ரீதியில் நெருக்கடிகளைக் கொடுக்கும். ஆனால் ரஷ்யாவிற்குப் பிராந்திய ரீதியில் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து பொருளாதார ரீதியில் பல நெருக்கடிகளைக் கொடுக்கும். சீனாவின் பொருளாதார வளர்ச்சியும் அதன் பொருளாதாரச் சீர்திருத்தமும் மேற்கு நாடுகளின் பொருளாதாரத்திற்கு அவசியமானவையாக இருக்கும். ரஷ்யாவைப் பொருளாதார ரீதியில் சின்னா பின்னப் படுத்தி விட்டால் பின்னர் அதன் பிராந்திய ஆதிக்கத்தை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்

2016ஆம் ஆண்டு வரலாறு படைக்கக் கூடிய அளவிற்கு தகராறுகளைத் தீர்க்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சூட்கேஸை'த் தூக்கிச் செல்ல சிரமமாக இருந்தபோது அதற்குச் சக்கரங்கள் பொருத்தப்பட்டன. எளிதாக அதை இழுத்துக்கொண்டு செல்ல முடிகிறது. சீனாவைச் சேர்ந்த ஹீ லியாங்கும், இதிலும் புதுமையாக சூட்கேஸையே ஒரு 'ஸ்கூட்ட'ராக மாற்றிவிட்டார். 7கிலோ எடை கொண்ட இந்த 'ஸ்கூட்ட'ரில் இரண்டு பேர் பயணம் செய்ய முடியும். ஒரு மணி நேரத்திற்கு 50 முதல் 60 கி.மீ வேகத்தில் 20 கிலோ மீற்றரை இந்த 'ஸ்கூட்டர்' சென்றடையும். அதுமட்டுமல்ல இடத்தைக் கண்டறிவதற்கான ஜி.பி.எஸ் வசதியும் செய்யப்பட்டுள்ளது. சரி இந்த வண்டி எதில் ஓடுகிறது எனக் கேட்கிறீர்களா? கவலை வேண்டாம் பெற்றோலில் இல்லை. மின்சாரத்தில் இயங்கக்கூடிய வகையில் ஹீ இதை வடிவமைத்துள்ளார். இதை எளிதாக 'ரீசார்ஜ்' செய்ய முடியும். இந்த சூட்கேஸ் ஸ்கூட்டரை உருவாக்க ஹீக்கு 10 வருடங்கள் ஆனதாம்.















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு

இலங்கையின் 1தர கணினி வழங்குனர் | நாடளாவிய சேவை வழங்குனர் | 4 வருட உத்தரவாதம் | 0% வட்டியின்றிய கொடுப்பனவு | DONGLE +2GB DATA FREE

## அபான்ஸிடமிருந்தான ALL - IN - ONE பிரிண்டர் ஒன்று இலவசம்




உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களே..!அபான்ஸிடமிருந்து நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மடிக்கணினிகளுடனும் பிரிண்டர் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

**இச்சலுகை ஜனவரி 1ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் மட்டுமே**



**LENOVO G 50 i5**
- i5 5200 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- DOS
- 1 Year Warranty

விசேட விலை ரூ.84,900
மாதாந்தம் ரூ.7,117

**LENOVO G 50 i5 VGA**
- i5 5200U 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- DOS
- 2GB Dedicated VGA
- 1 Year Warranty

விசேட விலை ரூ.92,900
மாதாந்தம் ரூ.7,784

**LENOVO IP 100 i3**
- i3 5th Generation
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display
- DOS
- 1 Year Warranty

விசேட விலை ரூ.68,500
மாதாந்தம் 5,750 ரூபாவிலிருந்து

**LENOVO IP 100 i3 VGA**
- i3 5th Generation
- 4GB RAM
- 500GB Hard Disk
- DOS
- 2GB Dedicated VGA
- 1 Year Warranty

விசேட விலை ரூ.72,900
மாதாந்தம் ரூ.6,117

Lenovo



**HP 15 AC i5**
- i5 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- DOS

ரூ.91,900
மாதாந்தம் 7,700 ரூபாவிலிருந்து

4 வருட கால இலவச உத்தவரவாதம்

**HP 15 AC i5 Win**
- i5 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- Windows 10

ரூ.96,900
மாதாந்தம் 8,083 ரூபாவிலிருந்து

4 வருட கால இலவச உத்தரவாதம்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

5886655 (திங்கள் - சனி) | us at www.facebook.com/abansit | நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் பெறலாம்.

Abans

---

பரம்பரை பரம்பரையாக அசைக்கமுடியாத நம்பிக்கையின் இருப்பிடம்

# றைனோ

கிறிஸோடைல் கண்ணாடிஇழை சிமெந்து கூரைத்தகடுகள்



நாளுக்கு நாள்... வருடத்திற்கு வருடம்... காலம் நகர்கின்றது ஆனால், ஒன்றுமட்டும் பரம்பரை பரம்பரையாக காலத்தால் அழியாத நம்பிக்கையின் இருப்பிடமாக திகழ்கின்றது.

**அதுதான் றைனோ**

எதிர்காலத்திலும் இந்த நம்பிக்கை தொடரும் அதுமட்டுமல்ல அனுபவமுடைய தச்சுத்தொழிலாளர்களின் தெரிவும் என்றுமே றைனோதான்

புதிய Colorup MARKETED BY RHINO ரூபிங் மற்றும் சீலிங் தகடுகள்

ரூ. 1,285/= க்கு மேல்

உடன் தொடர்புகளுக்கு 011 5748728/5748738

/ RhinoRoofinglk

RHINO

றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk

நாம் கிறிஸோடைலின் "பாதுகாப்பான பாவனைக்கான" நம்பத்தகுந்த நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2016 ஜனவரி 13ஆம் திகதி வெளியிடப்பட்டது.